நசகாண்டம்

மூலமும் - உரையும்

— இராமமுனிவர்



பதிப்பாசிரியர்:

டாக்டர் ந. கோவிந்தசாமி R.I.M.P.

நசுகாண்டம்

மூலமும்—உரையும்

வீரமாமுனிவர்

உரையாசிரியர்:

மா.. வடிவேலு முதலியார்

பதிப்பாசிரியர்:

டாக்டர். ந. கோவிந்தசாமி

வெளியீடு:

புதுவை மாநிலத் தமிழ் எழுத்தாளர் பேரவை

1980

மறு பதிப்பு 1980

விலை 1—50

கிடைக்குமிடம் :

டாக்டர். ந. கோவிந்தசாமி,
உரிமையாளர், ஆனந்தா எம்போரியம்,
பாண்டிச்சேரி-605 001.

புலவர்மணி. ஜோசப் நாயர்,
செயலர் ; புதுவை மாநிலத் தமிழ் எழுத்தாளர் பேரவை,
97/10, கோவிந்தசாலை, புதுவை-605 001,

உள்ளுரை

பதிப்புரை

சித்த மருத்துவ முறை தமிழர்க்கே உரியது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற கூற்று, நமது சித்த மருத்துவத்திற்குப் பொருந்தாது. விலைமதிக்க முடியாத மாணிக்கங்களாகப் போற்றத் தகுந்தவை. சித்த மருத்துவ நூல்கள் யாவும் சித்தர்களின் படைப்புகளாகும். நமது நாட்டிலுள்ள மருத்துவ ஏடுகளை, மேல்நாட்டவர் நாகரிக முறையில் ஆராய்ந்து, அதன் சிறப்பியல்புகளை நன்கு உணர்ந்து வருகின்றனர். அதுபோல நமது நாட்டுக்குச் சமய போதகராக வந்த இத்தாலி நாட்டு அறிஞரான Rev. Fr. பெஸ்கி தமிழ் மொழியை நன்கு கற்று பெரும் புலமை பெற்றுத் திகழ்ந்தார். இவரே வீரமாமுனிவர்.

இவர் எழுதிய நூல்கள் தேம்பாவணி, திருக்காவலூர் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அன்னையழுங்கல் அந்தாதி முதலியவை செய்யுள் நூல்கள், பரமார்த்தகுரு கதை, வேதியரொழுக்கம் முதலியன உரைநடை நூல்கள். இவரது சதுரகராதி தமிழ் மொழியில் முதல் அகராதி. முதன் முதலில் திருக்குறளை இலத்தினில் மொழி பெயர்த்தார். அவரது மருத்துவ நூல்களிலொன்று நசகாண்டம்.

நசகாண்டம், நமது சித்த மருத்துவ முறையில் நன்கு தோய்ந்து ஆய்ந்து எழுதப்பட்ட நூலாகும். இதில் செய்பாகம், கைபாகம் போன்ற விதிகளையும், நோய்களின் குணங்களையும், சரக்குகளின் சுத்திமுறையும், உட்கொள்ளும் அளவு முறைகளும், பத்திய முறைகளும் சொல்லப்பட்டுள்ளன. இது மருத்துவர்க்கும், மக்களுக்கும் அரிய பயன் தரும் நூலாகும் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

ஆனால் இந்நூல் கிடைப்பது அரிதாகிவிட்டது. சுமார் நாற்பது ஆண்டுகளுக்குமுன், பழய புத்தகக் கடையொன்றில் கிழிந்து சிதைந்த பிரதியொன்றைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த அருமையான மருத்துவ நூல் கிடைத்தால்

மக்களுக்குப் பயன்படுமே என எண்ணி, மருத்துவர் பலரை விசாரித்துவந்தேன் நண்பர், புலவர்மணி. ஜோசப் ராயர் அவர்கள், நசகாண்ட கையெழுத்து பிரதி இருப்பதாகவும் வெளியிடுவதானுல் தந்துதவுவதாகவும் சொன்னதோடு, அச்சு பிரதியும் வரவழைத்து தருவதாக உறுதி செய்தார். அவ்வாறே செய்ததோடு, பிரதியிலுள்ள பிழைகளைத் திருத்தியும் ஒப்பு நோக்கியும் உதவினுர்கள். அன்னுருக்கு என் நன்றி.

மற்றும் என் இலக்கிய நண்பரும், அன்பரும் தமிழ்மொழி வரலாற்றுத் துறைகளில் வல்லவருமான புதுவை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு. P. L. சாமி, I. A. S. அவர்கள் சிறந்த அணிந்துரை வழங்கியதற்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலுக்கு அழகிய முறையில் வீரமாமுனிவர் ஓவியம் வரைந்துதவிய ஓவியர் அமுதோன் அவர்களுக்கு நன்றி.

இந்நூலை தமிழ் மக்களும், சித்த மருத்துவர்களும் படித்து பயன் அடைந்தால் அதனையே பெரும் பேருகக் கருதுகிறேன்.

இப்படிக்கு,
ந. கோவிந்தசாமி, R. I. M. P.
உரிமையாளர்,
ஆனந்தா எம்போரியம்,
புதுச்சேரி-605 001.

அணிந்துரை

P. L. சாமி, I. A. S.,

புதுவை அரசின் வருவாய்த்துறைச் செயலர்,

மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், புதுவை மாநிலம்.

நசகாண்டம் என்ற ஒரு சித்த வைத்திய நூலை வீரமா முனிவர் இயற்றியதாகக் கூறுவர். இந்த நூலை படித்து பார்க்கும் போது சித்த வைத்திய மரபை பின்பற்றியே முனிவரும் இந்த வைத்திய நூலை இயற்றியிருக்கிறார் என்பது தெரிகிறது. முனிவர் சொல்லியுள்ள வைத்திய முறைகளின் சிறப்பைப்பற்றி சித்த வைத்தியர்கள் தான் கணிக்க வேண்டும்.

"ஆய்வு நூல் வல்லார் என்னையும் தங்களுள் ஒருவனாக கொள்வார் ஆகலாம். என்னால் செய்யப்படும் இந்நூலையும் தள்ளாது கொள்வர்" என்று முனிவர் அவையடக்கத்தில் கூறுவதைக் கவனிக்கவேண்டும். இவ்வாறாக வீரமாமுனிவர் தான் இயற்றிய பிற நூல்களிலும் கூறுவதைக் காணலாம். வெளிநாட்டிலிருந்துப் போந்து தமிழை துறைபோகக் கற்று வெளிநாட்டானான தான் இயற்றிய நூலை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டு தன்னையும் தங்களில் ஒருவனாக கருத வேண்டும் என்று முனிவர் கூறியிருப்பது இயற்கையே ஆகும்.

வெளி நாட்டார் நம் நாட்டு மொழிகளைக் கற்று இலக் கியங்கள் படைத்தனர். தமிழ் மொழியில் உரைநடைத்தமிழை பரப்பியவர்களே முனிவர் போன்ற அயல் நாட்டாரே ஆவர். வெளிநாட்டார் இலக்கணத்தைக் கூட எழுதலாம். ஆனால் வைத்திய நூலை வெளி நாட்டிலிருந்து வந்த ஒருவர் எழுதுவது மிகமிக அரிதாகும், பெரிதாகும். அந்த வகையில் வைத்தியத் தைப்பற்றி தமிழ் மொழியில் மட்டும்தான் வெளிநாட்டார் ஒருவர் நூல் எழுதிய பெருமை உள்ளது. யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்ற பரந்த கொள்கையோடு தமிழன்

தமிழ்த் தொண்டு செய்த வெளிநாட்டாரையும் போற்றினதால் தமிழ் மொழிக்கு வெளிநாட்டார் தொண்டு செய்த அளவு வேறெந்த இந்திய மொழிக்கும் வெளிநாட்டார் செய்ததில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். பிற இந்திய மொழிகளில் தத்துவ போதகர் வீரமாமுனிவர், கார்டுவெல், போப் போன்ற வெளிநாட்டு மாமேதைகளைக் காண முடிவதில்லை. வீரமா முனிவர் அஷ்டாவதானி போன்றவர், சந்த தமிழ் மொழியில் இலக்கணம், இலக்கியம். அகராதி, உரைநடை, பேச்சு தமிழ், எழுத்துச் சீர்திருத்தம் ஆகிய பல துறைகளைப் பற்றியும் எழுதி யுள்ளார். முனிவர் தமிழ் மொழியில் தொட்டதை எல்லாம் துலக்கி வைத்தார். தமிழ் மொழியில் முனிவர் தொடாத துறை இல்லை என்று கூறலாம். அந்த வகையில் முனிவரை ஆங்கிலத்தில் 'Polymath' என்றழைக்கலாம். பலதுறை மாமேதை என்று தமிழில் அழைக்கலாம்

புதுவையில் வீரமாமுனிவரின் வைத்திய முறைகள் வழங்கி வந்ததாக நான் கேள்விபட்டிருக்கிறேன். சித்த வைத்தியத்தைக் கடைபிடித்துவந்த கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வீரமா முனிவரை குருவாகக் கொண்டு வைத்தியத்தை செய்து வந்தனர் என்று கேள்விபட்டிருக்கிறேன். வீரமாமுனிவரே பொதியில் புத்தேளான அகத்திய முனிவரையே தனது குருவாக முதற்பாட்டிலேயே கூறியுள்ளார்.

இந்த நூலை பதிப்பிக்க ஆக்கமும் ஊக்கமும் தந்த புரவலர் ந. கோவிந்தசாமி அவர்கள், புதுவையில் கண்டுபிடித்து வழங்கிவந்து, இடையில் மறைந்த திரோ—அமேர் என்ற அருமையான மருந்தினை திரும்பவும் கொண்டுவந்தார். இந்த மருந்து நான் சிறியவனாக இருந்தபோது, கடலூர், திண்டிவனம் போன்ற பகுதிகளில் எல்லாம் மகப்பேறுக்கு சிறந்த மருந்தாகவும், நோய்களுக்கு சர்வ சஞ்சீவியாகவும் கருதப்பட்டது. இந்த மருந்தையும் முனிவர் கண்டுபிடித்திருப்பாரா? என்பது ஆராய்ச்சிக்குரியது. புதுவையைப் பிரெஞ்சுக்காரர்கள் ஆண்ட காலத்தில் பிரெஞ்சு பண்பாட்டின் தூண்டுதல் காரணமாக சித்த வைத்திய துறையில் பல புது மருந்துகள் தோன்றியிருக்கலாம். அவைகளை கண்டுபிடிப்பது சித்த வைத்திய அறிஞருடைய பொறுப்பாகும்

புரவலர் ந. கோவிந்தசாமி அவர்கள், வீரமாமுனிவருக்கு விழா எடுத்தபோது, இந்நூலை பதிப்பிக்கும் பொறுப்பையும் செலவையும் ஏற்றுக்கொள்வதற்கு தானுகவே முன்வந்தார். அவ்வாறே நூலை பதிப்பித்துள்ளார். அவரது தொண்டை போற்றி நன்றி பாராட்டாமல் இருக்கமுடியாது.

நசகாண்டம் என்ற சித்த வைத்திய நூல் இருப்பதாக எனக்கு முதலில் தெரிவித்தவர் புலவர் ஜோசப் ராயர் அவர்களே ஆகும். புலவர் அவர்கள் அரிதின் முயன்று படியெடுத்து ஏற்கனவே வெளியிட்ட நசகாண்டத்துடன் ஒப்பிட்டுள்ளார். அன்னுர் என்னுடன் இந்த நூலைப்பற்றி பலமுறை கருத்து பரிமாறி நூலை வெளியிட எல்லா வகையிலும் அல்லும் பகலும் முயன்ற தொண்டை பாராட்டாமல் இருக்கமுடியாது.

வீரமாமுனிவர் அருளிச்செய்த நசகாண்டத்தைப் படித்து, தமிழ்நாட்டு சித்த வைத்திய அறிஞர்களும், பிறரும் பயன்பெற வேண்டும் என்று விழைகிறேன். தமிழ் கூறும் நல்லுலகம் இந்த நூலை நன்கு வரவேற்கும் என்று கருதுகிறேன்.

'என்னை நன்ருய் இறைவன் படைத்தான்
தன்னை நன்ருய்த் தமிழ்ச்செய் யுமாறே'.

புதுவை
1-9-1980

P. L. சாமி.

படையல்

செந்தமிழ் தேசிகர் வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் பெருங்காப்பியம், சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், அங்கதம், இலக்கணங்கள், அகராதிகள், மொழிபெயர்ப்பு, மருத்துவ நூல்கள் எனப் பல திறத்தன. பல்பயன் பயப்பன.

முனிவரது பிறநூல்கள் பயிலப்படுவதில்லை. அவரது நவ காண்டம் ஓலைச் சுவடியாகவே மறைந்து கிடக்கிறது. சிந்தா மணியும், குணபாடமும் அவ்வாறே. நசகாண்டமும், அனு போக வைத்திய சிகாமணியும் அச்சேறியவை. பிரதிகள் கிடைப்பதில்லை. சென்னை சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலைய நூலகத்தில் முனிவரின் அனுபோக வைத்திய சிகாமணி நூற் பிரதியைக் கண்டு களிப்பேருவகை யடைந்தேன்.

நசகாண்டம் அங்கும் கன்னிமாரா நூலகத்திலும், ஆவணக் காப்பு நிலையத்திலும் கிடைக்கவில்லை. எனது பெருமதிப்பிற் குரிய நண்பர் தேம்பாவணித் தொண்டர் அரிதின் முயன்று கையெழுத்துப் பிரதியை அளித்தார். அதில் சில வெண் பாக்கள் சிதைந்து போயிருந்தன. பேராசிரியர் பா. வளன் அரசு அவர்களின் பேருதவியால் அவை கிடைக்கப்பெற்றன.

நசகாண்டத்தை மறுபதிப்பு வெளியிடுவதென்ற அடங்கா ஆவலில் முயன்றோம். புதுவை வள்ளல், ந. கோவிந்தசாமி அவர்களை அணுகினோம். அகமும், முகமும் மலர்ந்து அக் கணமே மலிவு பதிப்பாக அச்சிட்டு வழங்குவதாக இசைவு தந்தார்கள்.

நசகாண்டம் முனிவரால் இயற்றப்பட்டதன்று என்று கூறுவாருமுளர். இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. தேம்பா வணி போன்று சொல் நயம் பொருள் நயம் இல்லை என்பர். சித்தர்களால் இயற்றப்பட்ட மருத்துவ நூல்கள் யாவும் எளி மையானவையே! மேலும் சித்தர் நூல்களில் குழூஉக் குறிகள்

(Code Words) மலிந்திருப்பது கண்கூடு. ஆனல் நசகாண்டத்தில் குழூஉகுறியே காண்பது அரிது. நசகாண்டம் முனிவர் கூறுவதுபோல 'பண்ணுற்ற இந்நூல் படித்து உணர்ந்தவர்க்கு ஆமே! புண்ணுற்ற கைக்காடி போற்றுவரோ' (பாடல்-2) என அவை அடக்கத்தில் கூறுவதால், கற்றுணர்ந்த மருத்துவர்களுக்கு இந்நூல் பயன்படுமா? பயன்படாது. அங்ஙனம் பயன்பட்டால் கைப்புண்ணுக்குக் கண்ணுடி தேடுவர் எனக் கூறுதல் போலாம். எனக் கூறுவதால், நசகாண்டம் பாமர மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற பெருநோக்கிலே எழுதினுர் என்க.

39-ஆம் வெண்பாவிற்கு உரையாசிரியர் "பெண்ணுக்கு ஈடு" என வலிந்து தலைப்புக் கொடுத்துள்ளார். இது முற்றிலும் பொருந்தாது. இல்லற வாழ்வில் சில பெண்களுக்குப் பாலுணர்வு குறைந்து காணப்படும். சிலருக்கு மிக மிகக் குறைந்து காணப்படும். அவர்களது இல்லறம் பற்பல இன்னலுக்குள்ளாகும். அன்றும் இன்றும் நிகழ்வது. அத்தகைய பெண்களுக்கு (Sexual Frigidity) முனிவர் மருத்துவம் கூறினுரே அன்றி, ஆடவர்கள் கண்டபடி கண்ட பெண்களுக்கு ஈடுமுறை கூறவில்லை. பாலுணர்வு உள்ள பெண்களுக்கு இம் மருத்துவம் பயன்படாது.

இறுதியாக, கர்ம நிவர்த்தி நசகாண்டத்தில் காணப்படுகிறது. இது முனிவர் இயற்றியதா என வினவலாம். இது நசகாண்டம் 100 என்ற கொள்கையளவில், பதிப்பித்தவரும், உரையாசிரியரும் மேற்கொண்ட இடைச் சொருகல் என்பதற்கு ஐயமில்லை.

இக்கர்ம நிவர்த்தி புலிப்பாணி 500 என்ற மருத்துவ நூலில் உள்ளது. உரையாசிரியர் வெண்பாவை இடைச் சொருகி, அதற்கு எடுத்துக்காட்டாக புலிப்பாணிப் பாடலை மேற்கோள் காட்டியுள்ளார் உரையாசிரியர் இந்நூலில் வேறு எப்பாடலுக்கும் மேற்கோள் பாடல் காட்டாதபோது இதற்கு மட்டும் மேற்கோள் பாடல் ஏன்? இதுவொன்றே இடைச்சொருகல் என்பதைத் தெற்றென விளக்கும், கிடைக்காத வெண்பாவிற்கு ஈடுகட்டினுர் போலும்!

முனிவரின் மூன்ரும் நூற்ருண்டின்போது எல்லாருக்கும் பயன்படும் இந்நூல் வெளிவர பல வழியிலும் உதவியும் ஊக்கமும் அளித்த திருமிகு. ந. கோவிந்தசாமி அவர்களுக்கும் திருமிகு. P. L. சாமி, I. A. S., அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக!

தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு முனிவரின் மூன்ரும் நூற்ருண்டு விழாவின் படையலாக அளிக்கின்ரேம்.

ஜோசப் ராயர்,
செயலர்.

புதுவை மாநிலத்
தமிழ் எழுத்தாளர் பேரவை
புதுவை-605 011.
1—9—1980.

வீரமாமுனிவர்

அருளிச் செய்த

நசகாண்ட வெண்பா

(மூலமும் உரையும்)

காப்பு

நேரிசை வெண்பா

1. திசைமேவும் தென்கிரியில் சேர்முனிநூல் ஆய்ந்து
நசகாண்டம் ஒன்று நவில — அசைவோ(டு)
உருவில்லான் ஒன்றுன் ஒருபொருளான் அன்பர்க்(கு)
அருள்வான் அருள்பாதம் காப்பு.

(இதன் பொருள்) எட்டுத்திசைகளிலும் சென்று விளங்குகின்ற (புகழினையுடைய) பொதியிலின்கண் வீற்றிருக்கின்ற அகத்திய முனிவர் (தமிழில்) அருளிச்செய்த மருந்து நூற்களை ஆராய்ந்து நசகாண்டம் என்று பெயரிட்டு நூறு வெண்பாக்களாக ஒரு நூலை வழிநூலாகச் சொல்ல அழிவும் உருவுமில்லானும் (அன்பில்லாரிடம்) அணுகானும் ஒரே பொருள் அளவானும் அன்புள்ளார்க்கு அருள்வானுமான இறைவனுடைய திருவருள் திருவடிகள் காத்து அருள்செய்யும் (என்றவாறு)

'நசகாண்டம் நவில என்பதாம் காப்பு' என முடிக்க. நசம்—நோய். காண்டம்—பிரிவு. எனவே நோய்களைத் தீர்க்கும் மருந்துகளைச் சொல்லுகின்ற பிரிவு என்பதாகும்.

நசம்—நோய் என்பதனை பரிதிகண்ட பனிபோலாம் நச முள்ளோர்க்கு என்பதனால் அறிக.

அவை அடக்கம்

2. பண்உற்ற இந்நூல் படித்துணர்ந்த வர்க்(கு) ஆமே?
புண்உற்ற கைக்காடி போற்றுவரோ — எண்உற்ற
சிற்றறிவோர் யாரும் திறம்அறிய வே,சொல்வேன்
கற்றறிந்தோர் தள்ளார் கடன்.

(இ-ள்) நோய்களுக்குத் தக்க மருந்துகளால் அமைந்த இந் நூலானது (அகத்திய முனிவர் அருளிச்செய்த முதல் நூல்களைக் கற்றுணர்ந்த மருத்துவர்களுக்கு பயன்படுமோ? பயன்படாது. (அங்ஙனம் பயன்படுமென நான் கூறுவேன். ஆனால் அது) கைப்புண்ணுக்குக் கண்ணடி தேடுவார் எனக் கூறல்போலாம். ஆதலின், இந்நூலை யான் மருந்து நூலாராய்ச்சிக்கு அமையாச் சிற்றறிவினர் யாவரும் அந்நூற்களின் வன்மையை இந்நூலின் வழியாகவே அறிந்துகொள்மாறு அவர்கட்கே சொல்வேன். ஆகையால் (பேரறிவாளராகிய) கற்றோர்கள் இதைத் தள்ளார் எனல் முறைமையேயாம்.

ஆயுள்நூல் வல்லார், அவ்வாறாக என்னையும் தங்களில் ஒருவனைக் கொள்வா ராகலான், என்னால் செய்யப்படும் இந் நூலையும் தள்ளாது கொள்வர். மற்றையோர்க்குப் பயன்படு தலின் எனக் கொள்க.

தள்ளல் கடன் எனப்பாட மோதுவாரும் உளர். கண் களுக்கு எதிரில் உள்ள கைகளில் புண்ணை நேரே உணருமாறு நூல்களின் பொருள்களை நேரே உணரும் ஆற்றலுடையார் 'கற்றறிந்தோர்' எனவும், அவர்களின் துணையானே அங்ஙன மின்றி ஒன்று கற்றபின்னரே மற்றொன்று கற்கும் ஆற்றலுடை யார் 'சிற்றறிவோர்' எனவும் கொள்க. ஓகாரம் எதிர் மறை.

இந்நூல் கைவரப் பெறுவோர்

3. தாதுஅறிந்தோர் ஆகித் தமைப்பயந்த தாயாகும்
மாது அடியை எண்ணி மகிழுவார் — வேதநெறி
பத்திக்கும்ஆதி பரனைப் பணிவோர்க்கே
சித்திக்கும் இந்நூல் திறம்.

(இ-ள்) நாடி ஆராய்ச்சி செய்ய வல்லுநராய்த் தங்களைத் தோற்றுவித்த இறைவியின் திருவடியை உள்ளத்தின்கண் நினைந்து மகிழ்கின்றவர்களாய் (நான்கு வகையான) மறை நெறியால் அன்பு செய்தற்குரியராம், இறைவனைப் பணிகின்றவர்களுக்கே இந்நூலான் நோய் உணர்ச்சி, மருந்து தூய்மை புரிதல், மருந்து முடித்தல், நோய் நீக்கல், முதலிய வன்மைகள் கைகூடுவனவாம்.

'தாது' என, நாடி ஒன்றைத் தனிக்கூறினும், மற்ற ஏழும் உடன் கொள்ளப்படும்.

ஆயினும் தாதுவைத் தனிக் கூறியது இத்தமிழ் நாட்டிலுள்ள மருத்துவர்கள் அதன் ஆராய்ச்சியே மிக்கு உடையாரென்று உணர்த்தற்கு என்க. இவ்வாராய்ச்சியினை 'எண்வகை ஆராய்ச்சி' என்னும் நூலில் காண்க.

1. நாக செந்நூரம்

4. சுத்தி செய்த நாக துலங்குபலம் நான்காக
நத்தியோர் சட்டியிட்டு நன்குருகும்-அத்ததியில்
நாழிவெடிஉப்பு நல்ஓமம் சுக்கு மஞ்சள்
வாழி பொடியிட்டு வறு

5. இட்டு வறுத்ததூள் ஏங்காதே நாயுருவி
பொட்டாய் இடித்(து)அதையும் போட்டுவறு-நட்டமற
மாதுளம்பூப் போலாக மானே பழச்சாற்றல்
போதமுற வே புடத்தைப் போடு

6. போட்(டு)எடுத்த செந்தூரம் போற்றிப் பணஎடையாய்ச்
சூட்டு(ம்)திரிகடுகின் சூரணத்தில்-ஊட்டக்கேள்
குன்மம் பெருவயிறு கூறுதிசை யாம்; கவிசை
பன்னுலகில் மூலமும் போம்பார்.

7. மூலம்போம் மேகவகை மூளும்தொண் ணூற்றுறும்
காலுடனே கைஎரியும் காணுது-வேல்விழியே!
மேகத்,த டிப்பு,குட்டம் விந்துநட்டம் வெள்ளை
பாகத்தில் போய்ப்பதுங்கும் பார்.

செய்முறை : நன்ருகச் சுத்தி செய்த சிறுகண் நாகம் நான்கு பலம் எடுத்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றி அந்த நாகம் நன்ருய் உருகுகின்ற சமயத்தில்' வெடியுப்பு, ஓமம், சீவினசுக்கு, பூசுமஞ்சள் இந்நான்கும் சமமாகப் பொடி செய்து ஒருபடி எடுத்துக்கொண்டு அந்த நாகத்திற் கொஞ்சம் கொஞ்சமாய்ப் போட்டு அத்தூள் ஆகிவிடும்வரை வறுக்க வேண்டும் அப்படி வறுக்கப்பட்ட அந்த நாகத்தூளைச் சிவப்பு நாயுருவிச் சமூலம் இடித்து முன்போலவே கொஞ்சம் கொஞ்சமாக ஒரு படித்தூள் போட்டு வறுத்து, அந்த தூளைப் பிறகு எலுமிச்சம்பழச்சாற்ருல் அரைத்து மாதுளம்பூ நிறம் வரும் வரைக்கும் புடம்போட்டு வைத்துக்கொண்டு, இந்த செந்தூரத்தில் பணவடை திரிகடுகு சூரணத்துடன் சேர்த்து (நெய்யிலாவது, தேனிலாவது, பசுவின் பாலிலாவது) கொடுத்தால் சில நாட்களில், குன்மம், பெரிய வயிறு, கவிசை, மூலம், மேக நோய்கள், கால்கை எரிச்சல், மேகத்தடிப்பு, குஷ்டம், விந்து நஷ்டம், வெள்ளை முதலிய நோய்கள் தீரும்.

அநுபானம். நாளளவு இவை கூருமையால் ஏற்றவாறு கொள்க.

வறுக்கும் சரக்குகளுக்குத் தனித்தனி எடை கூருமையால் எல்லாம் சேர்ந்து படி என்று எழுதப்பட்டது. அவ்வாறே நாயுருவிக்கும் கொள்க. சிவப்பு நாயுருவி என்றது வழக்கு.

2. கருங்குழம்பு

8. கட்டாக இன்னம் கழறுகிறேன் வல்லத்துக்
கிட்டமொடு காந்தம் கிருமையாய் - நட்டமில்லை
நீர்வரடியின் முத்துநிரையாய்க் கழஞ்சு ஒன்று
நேர்வாளம் ரண்டாகும் நேர்.

9 நேர்ந்(து)இந்த நால்சரக்கை நேரிழையே! சுத்திசெய்து
போர்நிறைந்த கல்வத்தில் போட்டரைப்பாய்-சீராக
மேதிச்சிமிள் வைத்து வேண்டிப் பணவெடைதான்
பாதிபனை வெல்லத்தில் பாய்ச்சு.

10. வெல்லமதில் உண்டுபார் மெல்லியர்கள்! சூதகமும்
அல்லூருங் கட்டி நீராம்பல்எங்கே-சொல்லக்கேள்
காணும் மகோதரமும் காமாலை காய்ச்சல்கட்டி
பூணும் பலவாயுவும் போம்.

செய்முறை : வல்லத்துச் சிட்டம், காந்தம், தோல் நீக்கின நீரடி முத்து இம்மூன்றும், வகை ஒன்றுக்கு ஒரு கழஞ்சு (ஒன்றே கால் வராகன் எடை) நேர்வாளம் இரண்டு கழஞ்சு (இரண்டரை வராகன் எடை) ஆக நான்கு சரக்குகளையும் சுத்தி செய்து கல்வத்திலிட்டு நன்ருய் மெழுகு பாகமாகும் வரைக்கும் அரைத்து வழித்து எருமைக்கொம்புச் சிமிளில் வைத்துக் கொண்டு, அரைப்பண எடை பனை வெல்லத்தினுள் வைத்துக் கொடுத்தால் சூதகவாயு, இரத்தவாத குன்மக்கட்டி, நீராம்பல் மகோதரம், காமாலை, காய்ச்சல்கட்டி, எல்லாவாத ரோகங்கள் ஆகியவை நீங்கும். நாளவு, பத்தியம் முதலியவை தக்கபடி கொள்ளவும்.

'போந்தீந்த' எனவும் 'மேதை' எனவும் 'பாதை' எனவும் பாடமுண்டு. (9-ஆம் வெண்பா)

3. அக்கினிக்குமாரகம்

11. அயப்பொடியோ நான்காம் அனல்காந்தம் எட்டு
பயமில்லாச் சூதம்பதினு(று) உயர் மிகுந்த
கெந்தியிதற்(கு) இரட்டி மகள்;குமரிச் சாறுவிட்டு
முந்திஇரு சாம(ம்)அரை முன்.

12. அரைத்தபில்லை தாலத்தில் அப்பி வெயிலில்வை
நிரைத்தீபம் போல்எரிந்து நிற்கும்-நரைக்குழலாய்!
குன்ம மகோதரமும் கூறுதிசை யாம்கவிசை
பன்னுமுளை மூலம்போம் பார்.

13. மூல மகோதரமும் மோசக் கிராணியுடன்
ஆல முறுமன்ன புவிஏப்பம் அறும்-ஞாலமதில்
அண்டவா தம்.சந்நி ஆனவைக்கு மே,பணந்தான்
உண்டுபார் இஞ்சியில் ஒடும்.

செய்முறை : இரும்புத்தூள் வராகன் எடை நான்கு, காந்தம் வராகன் எடை எட்டு, இரசம் வராகன் எடை பதினறு கந்தகம் வராகன் எடை முப்பத்தி இரண்டு, ஆக நான்கு சரக்கு களும் சேர்ந்த அறுபது வராகன் எடையான ஆறுபலம் சரங்கு களையும், ஒரு கல்வத்திலிட்டுக் கற்ருழைச் சாறுவிட்டு இரண்டு சாமம் அரைத்துப் பில்லேத்தட்டி அப்பில்லேயை வெங்கலக் கிண்ணியில் இட்டு கடுமையான வெயிலில் வைத்தால் பில்லே யானது எரிந்து புகைந்து அடங்கும். அதைப் பொடி செய்து வைத்துக்கொண்டு வேளேக்கு ஒரு பணவெடை தேனில் குழைத்துக் கொடுத்துச் சுண்ண நீக்கின இஞ்சிச்சாறு ஒரு வாய் குடித்தால் சில நாட்களில், வாதகுன்மம், மகோதரம், நான்கு வகைக் கவிசை, முளேமூலம், மூலமும் மகோதரமும் கலந்த தொந்தநோய், கிராணி, புளியேப்பம் அண்டவாதம், சந்நி இவைகள் தீரும்.

இவற்றிற்குச் சாப்பிடும் நாள் அளவு முதலியவை வழக்கத் திற் கண்டு கொள்க.

4. பலவிரணங்களுக்கும் பச்சைக்களிம்பு

14. பச்சைக் களிம்புஒன்று பாடுகிறேன் வங்காளப்
பச்சையொடு குங்கலியம் பார், இரசம் - நிச்சயம்கேள்
ஊமத் திலேச்சாற்ருல் ஒக்கஅ ரைத்(து)எடுத்தே
யாமதனே யோர் கலத்தில் அப்பு.

15. அப்பும் கலத்தினிடை யானபசு வெண்ணெயிட்டுத்
தப்பாதே செப்பு கொண்டு தானிழைப்பாய்-அப்பாகேள்
புற்று கிரந்திகட்கும் பார.தன புண்புரைக்கும்
வெற்றிலேயில் பூசியிடு மேல்.

செய்முறை : வங்காளப்பச்சை, வெள்ளேக்குங்கிலியம், இரசம் ஆகியவைகளேச் சரி எடையாக எடுத்துக் கல்வத் திலிட்டு ஊமத்தை இலேச் சாற்ருல் நன்ருய் மெழுகு பதமாய் ஆகும் வரைக்கும் அரைத்து ஒரு செம்புத்தட்டின் பின்புறத் திலப்பி அம்மருந்துக்குச் சரியெடை பசுவெண்ணெய்கூட்டி வேருேர் செம்பினுல் நன்ருயிழைத்து ஒரு செப்புப்பரணியில் வைத்துக்கொண்டு, புற்றுபோல் உண்டாகும் புண்கள்

(லிங்கப்புற்று, யோனிப்புற்று, கன்னப்புற்று முதலியவை) கிரந்திகள், ஸ்தனங்களில் உண்டாகும் புண்கள், புரையோடு கின்ற விரணங்கள் ஆகிய இவைகளுக்கு வெற்றிலையிற்தடவிப் போட்டால் அவைகள் ஆறிக்குணமாகும்.

இம்மருந்து மேலுக்குப் போடப்படுவதாகையால் இதற்குப் பத்தியம் ஒன்றும் சொல்லாவிடினும் சிலைக்கும் பொருள்களை விலக்கவேண்டும்.

5. சிந்தாமணிக்குளிகை

16, சிந்தாமணிக் குளிகை செய்முறைகேள் நாகலிங்கம்
கெந்தி அரிதாரம் கேள்,நாபி–முந்தும்
திரிபாலை காரம் திரிகடுகும் தானே
அரியக்க ராகாரம் ஆம்.

17. ஆன பதின்மூன்றும் ஆயிழையே ஓர் நிறையாம்
ஆன மிகும் இத்தொகைக்கு வாளமிடு-ஈனமில்லாத்
தேன்கரும்பின் சாற்றில் தின ம்)இரண்டு
ஆட்டு(உ)ருண்டை
கான்சிறு பயற்(று)அளவு காண்.

18 கண்டுசேய்உ ருண்டை தனைக் கையானின் சாற்றிலிடு
நன்ருய் விரேசனமாம் நங்கையரே - தின்ருலோ
மோரில் கிராணியறும் முள்விடம்;ப ழச்சாற்றில்
சாரியவெல் லத்திற்போம் தாகம்.

19. தாகம்போம் பித்தமறும் சர்க்கரையாம் சீனியில்கொள்
சாகமிகும் தீபனமாம் தக்காளிக்(கு) ஆக
மரிகெட்ட க்ரந்திக்கு வல்லாரைச் சாரும்
திரிசுரங்க ளுக்(கு)ஆகும் தேன்.

20. தேனே வயிற்றுவலி தேர்முருங்கைச் சாறுடனே
பானேரும் கோநீரில் பாய்ச்சிவிடு – வாணுதலே
நீர்மலம் கட்டலுக்கு நின்றகுளிர் நீரில்கொள்
ஊர்புளியி(ல்) உட்டி உண்ணம்போம் உண்.

21. உண்ணிலோ குன்றிமணி ஒங்கும் இலைச்சாற்றில்
சந்நிவா தச்சுரங்கள் சாராவாம் - கன்னியரே!
நாடிபடர் தாமரையும் நாடுவிட்(டு) ஓடிவிடும்
தேடிஇஞ்சிச் சாற்றுருண்டை சேர்

22. உண்டைஇடு காடிதனில் ஓடு(ம்)அண்ட வாத(ம்)எலாம்
அண்டுவாய் நாற்றமறும் அம்பினிலே - கொண்டுபார்
பல்லுவலி கட்குளல்லாம் பாரிரண்டு காசுஎடையாய்
நல்லெண்ணெ(ய்) இல்,கொடுத்து நண்.

செய்முறை :- நாகபஸ்பம், இலிங்கம், நெல்லிக்காய்க் கந்தகம், தாளகம், நாபி, கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய்த்தோல், வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, அக்காராகாரம், ஆகிய பதின்மூன்று சரக்குகளையும் சரிஎடை எடுத்து, அந்த மொத்த எடைக்குச் சரி சுத்திசெய்த வாளம் சேர்த்து, உயர்ந்த கரும்புச்சாற்ருல் இரண்டு நாட்கள் வரைக் கும், மெழுகுபாகம் ஆகும் வரைக்கும் அரைத்து, சிறு பயிறு அளவு மாத்திரை செய்யவும்.

இக்குளிகையில் ஒன்ருவது, இரண்டாவது நோயாளியின் உடல் வன்மைக்கும், நோய் வன்மைக்கும் தக்கபடி, கரிசலாங் கண்ணிச்சாற்றில் இழைத்துக் கொடுத்தால் நன்ருய்ப் பேதியாம்.

பசுமோரிற் கொடுத்தால் கிராணி தீரும்
பழச்சாற்றிற் கொடுத்தால் தாகம்தீரும்
சீனி சர்க்கரையிற் கொடுத்தால் பித்தம்தீரும்
தக்காளிச்சாற்றில் கொடுத்தால் பசிமிகும்
வல்லாரைச் சாற்றில் கொடுத்தால் கிரந்திதீரும்
தேனில் கொடுத்தால் வாத, பித்த, சிலேஷ்ம சுரங்கள் தீரும்
முருங்கைப்பட்டைச் சாற்றிலாவது பசுவின் நீரிலாவது
கொடுத்தால் வயிற்றுவலி தீரும்
குளிர்நீரில் கொடுத்தால் நீர்க்கட்டும், மலக்கட்டும் நீங்கும்
புளியூறின நீரில் கொடுத்தால் வெட்டைதீரும்.
குன்றிமணியிலைச் சாற்றிற் கொடுத்தால் சந்நிவாதச்
சுரங்கள் தீரும்
இஞ்சிச்சாற்றில் கொடுத்தால் படர்தாமரை தீரும்

காடியில் கொடுத்தால் அண்டவாதம் தீரும்
வெந்நீரில் கொடுத்தால் வாய்நாற்றம் தீரும்
இரண்டுகாசுஎடை நல்லெண்ணெயில் கொடுத்தால்
பல்வலி தீரும்

6. திரிகடுகாதி குளிகை

23 திரிகடுகின் மாத்திரையைச் செப்பக்கேள் கெந்தி
அரிதாரம் அக்கரா காரம்–நிருவிஷமும்
நாவி திரிகடுகு நல்லரசம் நேர்வாளம்
சீவும் கடுக்காயும் சேர்

24. கடுக்காயும் இந்துப்பும் காண்;தான்றிக் காயும்
நெடுகடுகு ரோகனியு நேரே–அடைவாக்
குதிரைக் குளம்போடு கூடுபதினைந்து
மதித்து ஒருநிறையாய் வாங்கு

25. வாங்கிநன்றாய்ச் சுத்திசெய்து வாகுடனே கையான்சா(று)
தேங்குவதேன் கல்வத்தில் ஏழுதினம்- ஓங்கியரை
உண்டையது செய்து குன்றிபோல நிழலுலர்த்திக்
கொண்டதுஅனு பானமதில் கொள்

26. கொள்ளும் பழச்சாற்றில் கோடானு கோடிவீடம்
தள்ளுண்டு போகும்காண் தையலாய்-தெள்ளும்
சிறுநீர் கருப்பம்சார் சேர்த்ததனி(ல்) ஊட்டு
முறைவேக நஞ்சு முரியும்.

27 முரியுநெல்லிக் காய்ச்சாற்றில் முகடுப்பு சந்நி
மரியு(ம்) சயித்தியசுர வாதம்–அறையக்கேள்
மேதித் தயிரிலிட மேவு(ம்)அதி சாரமும்போம்.
போதநில வேம்பில்சுரம் போம்.

28. போகுமே சர்க்கரையும் சீரகமும் போற்றியிடு
சாகு(ம்)எட்டுக் குன்மவகை சாராது–தோகையரே!
முள்ளிப்பழத்(து) உருண்டை மேவவைத்துக் கைகட்டப்
பில்லி சூன்யம் பேயும் போம்.

29. பேய்போம் சிறுநீரில் பேர்ந்திழைத்துக் கண்ணிலிட
வாய்ந்தசந்நி வாதம்போ மங்கையரே-காய்ந்த
சிரங்கைபுளிம் பட்டைசுட்டுச் சேர்சாம்பல் நீரில்
பறங்கிப்புண் போகுமே பார்.

30. பார்த்துச் செய்இம் மருந்தைப் பாவிகட்குவிள்ளாதே
கூர்ந்தஅரும் சிற்றறிவால் கூறிவிட்டேன்-ஏற்றதிது
வேறு;குளி கையொன்றும் வேண்டாம் இதைச்செய்து
வாருங்காண் வைத்தியர் கைவாள்

செய்முறை :- கந்தகம், தாளகம், அக்கராகாரம், நிர்விசம் நாபி. சுக்கு, மிளகு, திப்பிலி, இரசம், நேர்வாளம், கடுக்காய்த் தோல், இந்துப்பு, தான்றிக்காய்த்தோல், கடுகுரோகணி. குதிரைக்குளம்பு, சீவல் ஆகிய பதினைந்து சரக்குகளையும் சரி யெடையாய் எடுத்துச் சுத்திசெய்து கல்வத்திலிட்டுக் கரிசலாங் கண்ணிச் சாற்றினுல் ஏழுநாள் வரைக்கும் நன்ருய் அரைத்துப் பிறகு எட்டாவது நாள் காலையில் குன்றிமணிபோல் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

1) எலுமிச்சம்பழச் சாற்றில் கொடுத்தால் பல விஷங்கள் தீரும்.

2) சிறுநீரும், கரும்புச்சாறும் சேர்ந்து அதில் கொடுத்தால் வேகமாய்ப் பாய்கின்ற விஷங்கள் தீரும்.

3) நெல்லிக்காய்ச் சாற்றில் கொடுத்தால் முகக்கடுப்பு, சீதவாதசுரம் போம்.

4) எருமைத் தயிரில் கொடுத்தால் அதிசாரபேதி தீரும்.

5) நிலவேம்புக் குடிநீரில் கொடுத்தால் சுரம்போம்.

6) சீரகத்தூளும் சர்க்கரையும் கலந்து அதில் கொடுத் தால் எட்டு வகைக் குன்மங்களும் போம்.

7) கண்டங்கத்திரிப் பழத்துடன் ஒரு மாத்திரை சேர்த்துக் கையில் கட்டினுல் பில்லி, சூன்யம், பேய் இவைகள் தீரும்.

8) சிறுநீரில் இழைத்துக் கண்ணிலிட்டால் சந்நிவாதம் தீரும்.

9) புளியம்பட்டையைச் சுட்டுச் சாம்பலாக்கி நீர்விட்டு ஊரவைத்து அந்நீரில் கொடுத்தால் பறங்கிப் புண்போகும்.

சிறப்பு ! 'இம்மருந்து மருத்துவர்களுக்கு ஒரு சிறுவாள் போன்றது ஆகையால் இதைச் செய்தால் வேறு மருந்து செய்ய வேண்டாம். என்க : என்றனர் நூல் தலைவர்.'

7. பறங்கிப்பட்டைச் சூரணம்

31. செப்பு,பறங் கிப்பட்டை செய்யகருஞ் சீரகமும்
திப்பிலி,சீ ஞகாரம் சேர்கழஞ்சு-தப்பில்லாச்
சங்கம்வேர் சந்தனமும் சாறு,நில ஆவாரை
செங்கத்தா ரிப்;பட்டை தேடு.

32. தேடியதோர் பட்டையுடன் தேருமுடக் கொத்தான்வேர்
பாடுமொவ் வொன்றரையாய்ப் பாவித்து-நாடியெடு
சூரணத்தைச் சர்க்கரையில் தின்று வெருகடிதான்
காரணம்கால் மண்டலத்தில் காண்.

33. காணும் கிரந்தி கணக்காய்ப் பதினெட்டும்
பானமிலாக் குட்டம் பதினெட்டும்-மோனமில்லா
மேகம்தொண் ணூற்ருறு மேவுமிடம் விட்டகலும்
பாகமிகு பத்தியமாம் பார்.

செய்முறை : நன்ருய்ச் சுத்தி செய்த பறங்கிச்சக்கை, கருஞ்சீரகம், சிறுதிப்பிலி, பொரித்தபடிகாரம், இந்நான்கும் வகை ஒன்றுக்கு ஒன்றேகால் வராகன் எடை, சங்கம் வேர்ப் பட்டை, சந்தனத்தூள், நிலஆவாரை, செங்கத்தாரிப்பட்டை முடக்கொத்தான்வேர் ஐந்தும் வகை ஒன்றுக்கு அரையே அரைக்கால் வராகன் எடை எடுத்து வெயிலில் உலர்த்திச் சூரணம் பண்ணிச் சமன்எடை வெள்ளைச்சர்க்கரை கலந்து பத்துநாள் வரைக்கும் காலைமாலை இரண்டு வேளையும் வொரு

கடியளவு சாப்பிட்டால் கிரந்தி 18, மேகம் 36 இவைதீரும். கடும்பத்தியம்.

8 இளநீர்க்கிருதம்

34. நள்ளிளநீர் நான்கிரண்டு நாடியதோல் சீவிக்கொள்
தெள்ளுமொரு நான்குநாள் சேற்றில்புதை-
பிள்ளாய்கேள்!
பின்(பு)அந்த நீரெடுத்துப் பேசு மருந்துகேள்
மன்லவங்கம் கோட்டம் மதுரம்.

35. மதுரமொடு நன்னாரி வாரிலுப்பைப் பூவும்
சதுரமிகு சந்தானமும் தானே-இதமுடைய
முந்திரிகை யின்பழமும் மேவியதோர் கற்கண்டும்
அந்தமிகு சர்க்கரையும் ஆம்.

36. ஆகுமிவை யொன்றாய் அரைதண்ணீ ரைக்கலந்து
பாகமிகு நெய்கால் படியிட்டு-வேகவைத்துக்
கொண்டுபார் நீரிழிவு, நீர்கடுப்பு வெள்ளைவெட்டை
சண்டைஇட்டுக் கொண்டோடும் தான்.

செய்முறை: நடுத்தரமான வழுக்கையுள்ள இளநீர் எட்டு எடுத்து, மேல்தோலை நன்றாய்ச் சீவிவிட்டு அவற்றை நான்கு நாள் சேற்றில் புதைத்து வைத்து ஐந்தாவது நாள் அவற்றைத் துளை செய்து நீரை எல்லாம் ஒரு மண்பாண்டத்தில் வார்த்து இலவங்கம், சாதிகோஷ்டம், அதிமதுரம், நன்னாரிவேர், இலுப்பைப்பூ, நல்ல மணமுள்ள சந்தனத்தூள், திராட்சைப்பழம், சீனக்கற்கண்டு, நாட்டுச் சர்க்கரை, இவைகள் வகைக்கு ஒரு பலமாய் எடுத்து தண்ணீர் விட்டரைத்து மேற்படி இளநீரில் கலந்து பசுவின் நெய் காலபங்கு விட்டுக்காய்ச்சி நெய்ப்பக்குவத்தில் இறக்கி நோயின் தன்மைக்குத் தக்க அளவாகச் சாப்பிட்டால், நீரிழிவு, நீர்க்கடுப்பு, வெள்ளை, வீழ்தல், உடல் கொதிப்பு இவை சண்டையிட்டு ஓடிப்போம்.

இதில் பத்தியம் நாளளவு சொல்லப்படாமையால் வழக்கப்படி கொள்க.

9. கலிக்கம்

37. பெருங்காயம் புன்குவித்து பேய்வித்து காரம்
நருக்கு மிளகுசுக்கு நண்ணி-யொருநிறையாய்
மேனியதின் சாற்றில் மிகவரை,சா ம(ம்)இரண்டு
பேணியுண் டை;செய்கேள் பின்.

38. கேள்சந்நி பற்கிட்டும் கேளாத் தலைவலியும்
கோள்செய் பிடரிக் கொடுங்கனப்பும்-வாள்மிக்க
மெல்லியர்தம் பாலிழைத்து மேவியிடு கண்ணினுக்
கல்லலற்றுப் போமென்(று) அறி.

செய்முறை : பெருங்காயம், புங்கன்விதை, பேய்ப்பீர்க்கு விதை, படிகாரம், திப்பிலிக்கட்டை, மிளகு, சீவினசுக்கு, இவ்வேழு சரக்குகளையும், ஒரு எடையாக எடுத்துக் கல்வத்திலிட்டுக் குப்பைமேனிச் சாற்ருல் இரண்டு சமம் வரைக்கும், நன்ருய் அரைத்து உருண்டையாகத் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலில் இழைத்துக் கண்களில் கலிக்கம் போட்டால் பதின்மூன்று சந்நிகள், பல்கிட்டு, எந்த மருந்திற்கும் கேட்காத தலைவலி, புறங்கழுத்துப்பளுவு இவை எல்லாம் நீங்குவதால் அந்நோய்களால் உண்டாகும் துன்பங்கள் நீங்கிப்போம் என்று அறியக்கடவாய்.

உருண்டை எனற்பாலது உண்டையென நின்றது.

10. பாலுணர்வு ஈடுபாடின்மை (Sexual Frigidity)

39. இச்சியதின் பாலை இயல்பாக வாங்கிப்பின்
பச்சமுடன் பாக்கில் பரிந்தூட்டி-நிச்சயங்கேள்
கையி(ல்)வைத்துக் கொண்டு கருங்குழலா ளுக்(கு)ஈய
மெய்யி(ல்)வைத்த நேச(ம்)விடாள் மேவு.

செய்முறை : இச்சி மரத்தின் பாலில் பாக்கை ஊறவைத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு பெண்ணுக்கு வெற்றிலையுடன் போட்டுக்கொள்ளும்படி செய்தால் அவள் ஆண்பிள்ளையிடம் வைத்த விருப்பத்தை விடமாட்டாள் ஆகையால் அதைச் செய்.

(குறிப்பு :- இல்லறத்தில் வாழும் பெண்கள் சிலருக்குப் பாலுணர்வு குறைந்து காணப்படும். இதுவும் ஒரு நோயே! குடும்பப் பெண்களின் பாலுணர்வின்மையைப் போக்கி, அவர்கள் இல்லறத்தில் சிறப்பாக வாழ இம்முறை பயன்படுவது. இது பெண்களுக்கு வசிய மருந்தல்ல. பாலுணர்வுள்ள பெண்களுக்கு இம்முறை எந்தப் பயனுமளிக்காது. — புலவர் ஜோசப்ராயர்)

11. மேகத்திற்குச் சூரணம்

40. வெள்ளறுகு சங்கம்வேர் முத்தக்கா சொடு,கஞ்சா
வள்ளன் முடக்கொற்ருன் வளர்குறிஞ்சான்–தெள்ளும்
நவ,கரிச லாங்கண்ணி நண்ணிய,ச மூலம்
சிவனரின் வேம்பதுவும் சேர்.

40. சேர்த்திடித்த சூரணத்தைத் தேமொழியே! கோசத்தில்
காற்றிடித்த மேகவெள்ளை கையெரிவு-மாற்றமிலா
மேக மொடுசூலை மேவும் வெடிசூலை
போகுமே எவ்விடமும் போற்று.

செய்முறை : வெள் அறுகு, சங்கம்வேர், கோரைக்கிழங்கு, கஞ்சா, முடக்கொத்தான், சிறுகுறிஞ்சான், கரிசலாங்கண்ணி சமூலம், சிவனர் வேம்பு, இவைகளையெல்லாம் நன்ருய் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்துகொண்டு அதில் வொருகடியளவு பசுவின் நீரில் கலந்து சாப்பிட்டால் வாயுவினுல் உண்டான மேகவெள்ளை, கைஎரிச்சல், மேகம், சூலை, வெடிசூலை, சர்வவிஷங்கள் இவைகள் எல்லாம் தீரும்.

நாளளவு, மருந்தளவு, இச்செய்யுட்களில் சொல்லப்படவில்லை. அவை வழக்கப்படி கொள்ளவும்.

12. மாந்தக்குடிநீர்

42. வேளைவேர் சுக்குடனே வெந்தயமும் வெள்ளுள்ளி
பாளை வசம்பு பகர்ஓமம்–வாள்விழியே!

ஒன்ருகக் காய்ச்சி யுடன்,குழந்தைக்(கு) ஈய
கண்டவுடன் மாந்தம்போம் காண்.

செய்முறை : நல்ல வேளைவேர், சீவின மாச்சுக்கு, வெந்தயம், உரித்த வெள்ளைப்பூண்டுத்திரி, வட்ட த்திருப்பி, வசம்பு, ஓமம், இவைகளை எல்லாம் சம எடையாக எடுத்து இடித்துத் தண்ணீர்விட்டு எட்டுக்கொன்ருய்க் குடிநீர்க்காய்ச்சி, கைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் அக்குடிநீரைக்கண்டவுடனே மாந்தநோய் ஓடிப்போய்விடும்.

தண்ணீர் அளவு, காய்ச்சும் அளவு, குடிக்கும் நாளளவு சொல்லப்படாமையால் வழக்கப்படி செய்க.

'மாந்தம்' எனப் பொதுப்படக் கூறினமையால் எல்லா மாந்தங்களையும் கொள்க.

13. உதரவாயு சுரசம்

43. தானென்னும் வெள்ளுள்ளி தப்பாம லும்,போற்றி
வேனென்னும் அக்கினியில் வேகவைத்-தேனென்னும்,
இஞ்சியு டன்,அரைத்து,எ ரித்தந்த நீர்குடிக்க
வஞ்சியுதர வாய்வில்லை மாண்.

செய்முறை : உரித்த வெள்ளைப்பூண்டுத் திரிகளை கும்பியில் துணியில் முடித்து செருகி வேகவைத்து அதையும் அதற்குச் சமஎடை இஞ்சியையும் சேர்த்து அரைத்துப் பிழிந்து கொதிக்கவைத்து அந்த சுரசத்தைக் குடித்தால் வயிற்றிலுள்ள வாயு நீங்கிப் போய்விடும்.

14. பருத்திவிதைச் சூரணம்

44. பண்ணும் பருத்திவிளா பாரிலுள நெற்பொரியும்
எண்ணுசிறு திப்பிலியும் ஏலமுடன்-நண்ணுபொடி
சர்க்கரையும் தேனும் தளரக் குழைத்துண்ண
விக்குள்-சத்திபோகும் விரும்பு.

செய்முறை : பருத்திக்கொட்டைப் பருப்பு, விளாவிரை, நெற்பொரி, சிறுதிப்பிலி, ஏலரிசி–இவைகளைச் சமமாக எடுத் திடித்துத் தூள்பண்ணி, அந்தத் தூளளவு நாட்டுச் சர்க்கரை கலந்து அதில் வெருகடி எடுத்துத் தேன் தளரவிட்டுக்குழைத் துச் சாப்பிட்டால் விக்கல், வாந்தி இவைகள் தீரும்.

நாளளவு முதலியவை வழக்கிற் கொள்க.

15. சாரபற்பம்

45. தீநீராம் சாரத்தில் நீரான பற்பம்கேள்
பூநீறு வேணமட்டும் போந்துகொள்-நானீரால்
துப்பாத் தெளிவிறுத்துச் சூடாக வே,யெரிக்க
உப்பாகும் பின்கேள் உவந்து.

46. உகந்தே இதனுடனே உண்ணுகறி உப்பும்
விகர்ந்தகல் உபபு,வெடி உப்பும்-பகர்த்த
இவையோ ஒருகழஞ்சாம் ஏற்ற,கல் லிட்டு
நவாசாரம் ஓரிரண்டாய் நாட்டு.

47. நாட்டிப் பழச்சாற்ருல் நால்சாமம் நீவிரும்பி
ஆட்டிவில்லை காயவைப்பாய் அன்பாகத் தேட்டமுற
ஓடதனில் முடிமண்செய் தொக்க முழுப்புடமாய்ப்
போடவே பற்பதமாம் பூண்.

48. பூணுமிந்தப் பற்பமதைப் போற்றி மறுபடியும்
தோணுபழச் சாற்றரைப்பாய் தோய்குழலே-நாணமற
இப்படியே மூன்றுபுடம் இட்டுஎடுத்து என்னுடைய
சொற்படிகேள் சுக்குடைய தூள்

49 தூளில் பணஎடைகொள் தீருநோய் சொல்லுகிறேன்
வாள்வான குன்மம்எட்டும் வாய்வனைத்தும்-பாழான
எந்நோயும் தீரும்எளிதல்ல என்றுரைத்தாள்
முன்நாளில் என்தாயும் ஓர்ந்து.

செய்முறை : பூநீறு வேண்டியவரைக்கும் கொண்டு வந்து ஒரு மண் குடத்திலிட்டுத் தண்ணீர்விட்டுக் கரைத்து ஒருநாள்

விட்டு, மறுநாள் தெளிந்தநீரை வேறு ஒரு மண் குடத்தில் இட்டு அடுப்பிலிட்டு எரித்தால் உப்பாகும். அவ்வுப்பு பலம் ஒன்று. சோற்றுப்பு, கல்உப்பு, வெடிஉப்பு இவை மூன்று வகை ஒன்றுக்கு 1¼ வராகன் எடையும்; நவாச்சாரம் பலம் ¼ ஆக எடுத்து எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்ருல் நான்கு சாமம் வரைக்கும் அரைத்துப் பில்லைத்தட்டி உலர்த்தி, ஒரு அகலில் இட்டு மேலும் ஓர் அகல்மூடிச் சீலை மண்செய்து உலர்த்தி 10 எருவில் புடம்போட்டு; ஆறவிட்டு எடுத்தால் பற்பமாம். அதை மறுபடியும் இரண்டு புடம்போட்டு எடுத்து வைத்துக் கொண்டு சுக்குத்தூளில் ஒரு பணஎடை பற்பம் சேர்த்துச் சாப்பிட்டால் எண் வகைக்குன்மம், சர்வவாயுக்கள் மற்றுமுள்ள நோய்களாகிய யாவும் தீரும். இது பரமேஸ்வரி உரைத்தது என்று அறியக் கடவர்.

நாளளவு சொல்லாமையால் நூல்வழக்கின்படி கொள்க.

பூநீற்று உப்பின் அளவு சொல்லப்படாமையால் மற்ற உப்புகளின் அளவுகளைக் கொண்டு பலம் என்று எழுதினம்.

(பரமேஸ்வரி உரையாசிரியர் கூற்று).

16. சந்நிவாதக் குளிகை

50. இந்துப்பு கெந்தியுடன் ஏற்றதொரு வெங்காரம்
உந்து திரிகடுகும் ஓர்கழஞ்சு-பந்தமிகு
வாளமதில் இரண்டு வளர்கடுகு ரோகணியும்
சாலவெடை நான்காகும் தான்

51. ஆன சரக்குஇவற்றை அம்மிதனி லே,விரும்பீ
ஈனஎலுமிச் சம்,பழச்சா றுஇட்டரைப்பாய்-நான்குசாமம்
நல்உழுந்து தன்னளவாய் நல்கியதோர் உருண்டைதனை
வெல்இஞ்சிச் சாற்றிலிடு மின்.

52. மின்ஞகத் தீரும் வியாதிகளைக் கேள்அணங்கே
அன்னமே எச்சுரமும் அண்டாதே—மண்ணின் மிசை
தோஷ மொடுசந்நி சூதான வாய்வனைத்தும்
பாசமறப் போமே பறந்து.

செய்முறை:- இந்துப்பு, நெல்லிகந்தகம், பொரிக்காத வெங்காரம், தோல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி இவ்வாறும் வகைக்கு $1\frac{1}{2}$ வராகன் எடை, சுத்திசெய்த வாளம் 2 வராகன் எடை, கடுகு ரோகணி 5 வராகன் எடை ஆகிய இவைகளை யெல்லாம் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச் சாற்ருல் நான்கு சாமம் அரைத்து உழுந்தளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி இஞ்சிச் சாற்றில் அநுபானம் செய்து கொடுத்தால் சர்வசுரங்கள், எழுவகைத்தோஷங்கள், பதின்மூன்று சந்நிகள் சர்வவாயுக்கள் ஆகிய இவைகள் எல்லாம் தீரும்.

17. பவழ பற்பம்

53. சொற்பமல்ல என்தாயார் சொன்ன வயணங்கேள்
நற்பவழம் வாங்குவாய் நன்னுதலே—இப்புறங்கேள்
தெள்ளு முயலுதிரந் தேடி அதில்பிசறி
வள்ளலே மூன்றுநாள் வை.

54. வைத்ததொரு நற்பவழம் வாகான சுத்தியதாம்
தப்பா(து) இலந்தைஇலை தான்அரைப்பாய்-மெய்ப்பாய்க்
கவசமிட்(டு) ஈரைந்து காட்டெரு(வு) அடுக்கித்
திவசமிட்டு நற்புடஞ்செய் சீர்.

55. சீரான பற்பத்தைச் சேதாவின் வெண்ணெயில்உண்
தீராவோ மந்தார காசமுதல்—பாரான
நீரடைப்பு வெட்டைமுதல் நோயகலும் விந்துநட்டம்
பாரடைப்பும் இல்லை மகிழ்.

செய்முறை:- நற்பவழம் வேண்டிய வரைக்கும் வாங்கி முசல் இரத்தத்தில் பிசறி மூன்று நாள் வைத்து; நான்காவது நாள் காலையில் இலந்தை இலையை அரைத்து அந்தப் பவழத்துக்குக் கவசம் செய்து 10 காட்டெருவில் புடமிட்டுப் பிரித்துப் பீங்கானிலிட்டுக்; காற்ருற வைத்தால் நல்ல பற்பமாம். அப்பற்பத்தைப் பசு வெண்ணெயில் சாப்பிட்டால், மந்தார காசம், நீரடைப்பு, வெட்டை, விந்துநட்டம் இவைகள் தீரும்.

மருந்தளவு, நாளளவு, பத்தியம் இவை நூல் வழக்கின்படி கொள்க.

18. கல்லடைப்புக்குச் சாறு

56. வெள்ளரிபின் பத்திரிச்சார் வேண்டும் அரைப்படியில்
களபெருங் காயம் கரைத்துவிட்(டு)—உள்ளதுகேள்
அல்லலுட னே,உண் டவன்,முகம்,கீ ழாய்ப், படுக்கக்
கல்லடைப்பென் கல்வீழுங் காண்.

செய்முறை:- வெள்ளரி இலைச்சாறு அரைப்பாடியில் கொஞ்சம் பெருங்காயத்தை நன்ருய்க் கரைத்துக் குடித்துக் கவிழ்ந்துபடுத்துக்கொண்டால் கல்லடைப்பென்று சொல்லப் படுகின்ற கல் கீழே விழுந்துவிடும்.

19. வெள்ளைக்கு எண்ணெய்

57. அறையக்கேள் எள்எண்ணெய் ஆடாதோ டைச்சார்
நிறையொன்ருய் நீயெரித்து வாங்கிக்—கரண்டியொன்று
கொண்டுபார் வெள்ளைவெட்டை கூறியதோர் அஸ்திரணம்
பணடத்தில் போய்ப்பதுங்கும் பார்.

செய்முறை:- எண்ணெய், ஆடாதோடைச் சாறு இந்த இரண்டையும் சரியளவாக, ஒரு மட்குடத்தில் ஊற்றி எரித்துப் பக்குவத்தில் வடித்து வேளைக்கு ஒரு கரண்டியளவு சாப்பிட்டால், வெள்ளை, வெட்டை, எலும்பின் விரணம் இவைகள் போய்விடும்.

20. தாதுபுஷ்டிக்கு இலைக்கற்கம்

58. பாங்காக் குறிஞ்சானின் பத்திரியைக் காலைதனில்
தேங்காய்ப் பா லில், அரைத்துத் தின்னவே—சாங்கமாய்
மாதர்தமைக் கூட மனமுண்டாம் நாடோறும்
தாதுபுஷ்டி உண்டாகும் தான்.

செய்முறை:- சிறுகுறிஞ்சான் இலையைத் தேங்காய்ப்பால் விட்டு அரைத்துக் காலைதோறும் தின்றுகொண்டு வந்தால் பெண்களைக் கூடுதற்கு விருப்பமுண்டாகும்படி தாதுபுஷ்டி உண்டாகும்.

21. குண்டலாதித் தைலம்

59. குண்டலாதித் தயிலம் கூறுகிறேன் சங்கம்வேர்
பண்டழிஞ்சில் பட்டை பறங்கிப்பட்டை—கண்டிதஞ்சேர்
வில்வம் அமுக்கராவேர் வேண்டுவகை பத்துபலம்
வல்லஇடி தூணிசலம் வார். -

60. தூணிசலம் எட்டொன்ருய்த் தோதையே! காய்ச்சியபின்
வேணுமுன்போல் எண்ணெய் மேவவிடு—வேண
தெடுபசுவின் பால்பலமுன் றேதினம்சர்க் காரை
கடுரோக ணீ,யரத்தை காண்.

61. காணும் வலம்புரிக்காய் கைகண்ட சந்தனமும்
பூணும் புஜபத்ரி பூலாவேர்—வேணும்
செவியமிளகு அத்தியின் திப்பிலியும் மானே
அவியங்க ணுலரைக்கால் தான்.

62. தாளும் சரக்குகளைத் தன்மையுடன் நாட்டெண்ணெய்
பானம்அதில் கலந்து பாய்க்கடுப்பின்—தேனே
மெழுகு பதம்பார்த்து மெள்ள வடித்தாங்கே
பழுதல்ல வேமுழுகிப் பார்.

63. முழுகும் இலுப்பையதின் மூத்தபிண் ணுக்கில்
கொழுவாத சந்நிகுன்மம் கோஷ்டம் –பழுதுசெய்யும்
பீநசங்க ளும்,செவிடும் பேசாத காதிரைச்சல்
மாநிலத்தில் கண்மறைவு மாறும்

64 மாறுமே சூலை வயர்கால் முடக்கதுவும்
வாரு சருவாங்க வாதமுந்தான்—பார்மீதில்
சென்னிதனில் உண்டான தீராத நோய்கள்எலாம்
எண்ணெய்கண் டால்,ஓடும் ஏற்று

செய்முறை:- சங்கம்வேர், அழிஞ்சிற்படடை, பறங்கிச் சக்கை, வில்வவேர், அமுக்கிளுங்கிழங்கு, இவைகள் வகைக்கு பலம் 10 எடுத்து இடித்து ஒரு குடத்தில் போட்டு எட்டுப்படி தண்ணீர்விட்டு எட்டுக்கு ஒன்ருன ஒரு படியாய் இறக்கி வடி

கட்டி அதில் ஒரு படி எண்ணெய் ஊற்றி, ஒரு படி பசுவின் பால், நாட்டுச் சர்க்கரை பலம் 3, கடுகு ரோகணி, சந்நராஷ்டம், வலம்புரிக்காய், சந்தனத்தூள், புஜபத்திரி, பூலாவேர், செவ்வியம், மிளகு, யானைத் திப்பிலி இவை வகைக்குப் பலம் அரை எடுத்து இவைகளை மேற்படி பசுவின் பாலால் அரைத்து எல்லாவற்றையும் ஒன்ருய்க் கலந்து எரித்து; மெழுகு பதத்தில் வடித்து நான்கு நாட்களுக்கு ஒரு முறை எண்ணெயிட்டு இலுப்பைக்கட்டி அரைப்பிட்டுத் தனி வெந்நீராற்றிக் குளித்து வந்தால் வாதசந்நி, குன்மம், குஷ்டம், பீநசங்கள், செவிடு, காதிரைச்சல், கண் பார்வை மறைவு, சூலை, கால் முடக்கல், சர்வாங்கவாதம், தலையில் உண்டாகும் எல்லா நோய்களும் தீரும்.

22. வெள்வங்க பஸ்பம்

65. பார்சிறந்த சம்புவின்வேர் பண்பாய் அதை அரைத்து
நேர்வெள்வங் கத்தை; அதில் நீபொதிவாய் – சேர்ந்ததனை
ஒடுகீழ் மேலும்இட்டு ஒண் தொடியே! ஐம்பதெரு
போடுபுடம் ஆறிஎடு போது.

66. ஆறியெடு பற்பமதாம் ஆயிழையே! நெய்தேனில்
மாறிப் பணவெடைஉண் மண்டலங்கால்—வீறிவரும்
மேகம் அதிசாரம் வேம்அஸ்தி வெட்டைபித்தம்
போகு மிகு விந்துண்டாம் போற்று,

செய்முறை:- நாவல் மரத்தின் வேர் பட்டையை நன்ருயரைத்து, அதற்குள் சுத்திசெய்த வெள்வங்கத்தைப் பொதிந்து ஓட்டிலிட்டு ஓடுமுடி சீலைமண் செய்து உலர்த்தி 50 எருவில் புடம்போட்டு ஆறினபின் எடுத்துப் பார்த்தால் பற்பமாம். அப்பற்பத்தைக் காலையில் நெய்யிலும், மாலையில் தேனிலுமாகக் கால் மண்டலம் சாப்பிட்டால் மேகம், அதிசாரம், மிக்க வேக்காட்டையுடைய அஸ்திவெட்டை. பித்தம் இவைகள் தீரும் மிக்க விந்துண்டாகும்.

23. நாளக பற்பம்

67. பொய்யல்ல சத்தியமாய்ப் பேசுகிறேன் பொற்கொடியே!
மெய்யறியச் சோதித்துப் பாரிதனை—அய்யமில்லை
தாளகத்தை வாங்கித் தயவாகச் சுண்ணும்பில்
நாளகத்தி லேபொதிந்து நண்.

68, நாளதுதான் ஒன்றுசென்ருல் நல்லசுத்தி நீயெடுத்துத்
தாளியிட சாறுஅதனில் தானும்போட்டு—ஊளையற
ஊறிநாள் மூன்ருனல் ஒக்க எடுத்(து) உலர்த்தித்
தேறியமுன் சாற்றிலரை தேர்ந்து.

69. அரைத்ததொரு வில்லைதனை யன்பாய் உலர்த்தி
நிரைதருமண் ஓடிட்டு நிற்கப்—பரையுரைத்தாள்
பத்தெருவில் ஓர்புடம்செய் பற்பம தாம்;கண்டீர்
மெத்தக்ஷய ரோகமெங்கே மின்.

செய்முறை:- தாளகம் பலம் ஒன்று கொண்டுவந்து ஒரு பாண்டத்திலிட்டுச் சுண்ணும்புக் கல் கீழும் மேலும் இட்டுத் தண்ணீர்விட்டு வைத்து ஒரு நாள் சென்ற பின்னர் எடுத்தால் நல்ல சுத்தியாயிருக்கும். அதன்பிறகு அத்தாளகத்தைத் தண்ணீரால் கழுவித் தூய்மையாத்கி வேருெரு மண்குடத்திலிட்டுத் தாளியிலைச் சாறு மிதக்கவிட்டு மூன்றுநாள் ஊரவைத்து நான்காவது நாள் காலையில் அதை எடுத்துக் கழுவி வெயிலில் உலர்த்தி; அகலில் வைத்து மேலும் அகல்மூடி மண்சீலை செய்து உலர்த்திப் பத்து எருவில் புடம்போட்டு ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் பற்பமாம் .இதனுல் க்ஷயரோகம் தீரும்.

24. யோனிப்புற்றுக்குச் சித்திரமூலாதி மாத்திரை

70. சித்திரம்சேர் மூலம்அதோ சீராய்ச் கழஞ்சுஒன்று
சத்திரம்சேர் பூரமது வும்;கழஞ்சு—சத்தியம்கேள்
ஓம(ம்) ஒருகழஞ்(சு) ஓதுபனை வெல்லமொடு
சாமம்இரண் டேஅரைப்பாய் தான்.

71. அரைத்து மிளகுஅளவி லன்பான வுண்டை
தரையிலோர் பத்துதினம் தானருந்து—நிறைகுழலே!
ஏதுக் கலேச்சல்- ரண க்ரந்தியும் ரணங்கள்
மாதர் யோனிப் புற்றுமாறும்.

72. மாறுமே சூலேயெல்லாம் வார்க்கள்ளிப் பூக்கிரந்தி
தீருமிலிங் கப்புற்று பௌத்திரமும்—சீறுமிகு
கன்னப் பிளவைபக்கம் காணும் படுப்பிளவை
என்னசொல்வேன் மார்சிலந்தி யோடும்.

73. ஓடுமே விப்புருதி யோடுகின்ற குன்மமெட்டு
நாடுதனில் மேகரணம் நாடாது—மாடுகளே
காடுதனில் மூலிகையைக் காணுமல் ஏன் அலேவீர்
வீடிருந்து இம்முறைசெய் மின்.

செய்முறை:- சித்திரமூல வேர்ப்பட்டை ஒன்றேகால் வராகன் எடை, சுத்திசெய்த பூரம் ஒன்றேகால் வராகன் எடை, ஓமம் ஒன்றேகால் வராகன் எடை, பனேவெல்லம் மூன்றே முக்கால் வராகன் எடை இவைகளேயெல்லாம் சேர்த்து இரண்டு சாமம் அரைத்தால் மெழுகு போலாகும். இதை ஒரு மிளகளவில் ஒரு நாளேக்கு இரண்டு வேளேயாகப் பத்து நாள் சாப்பிட்டால் சாதாரண விரணங்கள், விரணகிரந்திகள், யோனிப்புற்று, சூலேக்கள்ளிப் பூவைப்போல் கொத்துக்கொத்தாய் உடம்பில் படரும் கிரந்தி, இலிங்கப்புற்று, பௌத்திரம், கன்னப்பிளவை, பக்கப்பிளவை, படுப்பிளவை, மார்சிலந்தி, விப்புருதி, எண்வகையான குன்மம், மேகவிரணம் இவைகள் தீரும். காட்டில் பெரிய வேலேகளேச் செய்கின்ற மூலிகைகள் இருந்தும், அவைகளே உணரமாட்டாமல் அலேவதில் பயன் ஒன்றும் இல்லே. இம்மருந்தை வீட்டில் இருந்துகொண்டே செய்யுங்கள்.

25. அயக்காந்த செந்தூரம்

74. பாந்தமாம் செந்தூரம் பாடுகிறேம் பாவையரே!
காந்த மரப்பொடியும் கட்டாகச்—சேர்ந்தவைகள்
ஓர்நிறையாய் சுத்திசெய் தூட்டிஅரை கல்வத்தில்
ஓர்நிறைந்த காமப்பால் இட்டு.

75, பாலிட்டு அரைத்துவில்லை பத்திரமாய்க் காயவைத்து
மேலிட்டோட் டில்; மண்செய் மெல்லியாய்—காலிட்ட
ஐம்ப தெருப்புடம்செய்(து) ஆறினபின் நீஎடுத்துப்
பண்புடனே செய்முறையைப் பார்.

76. பாருலகில் இன்னம் பகரும் கொடுப்பையில்நீர்
நூறுகரந் தைச்சாறு நாட்டிரண்டும்—ஒருநிறை
நாற்சாம(ம்) ஆட்டி நயந்துமுன் போல்புடம்செய்
தாழ்ச்சியிலை செந்தூரம் தான்.

77. செந்தூரம் குன்றியெடை சுக்கினது தூளிற்கொள்
வெந்தூறு கின்ற;படர் மேகமேங்கே?—நந்தி சொன்னர்
காமாலை சூலை கழல்வாதம் கால்வெடிப்பு
போமான பித்தவெட்டை போற்று.

78. போற்றும்கை கால்குடைச்சல் பொல்லாத குன்மமெல்லாம்
மாற்று மதிசாரம் ஆருதமும்—தேற்றமிகு
பத்தியம் செய்எண் புளிபுகையும் பார்த்தகற்று
சத்தியம்சொன் னேன்;பிணி போம் தான்,

செய்முறை:- சுத்தசெய்த காந்தம், சுத்திசெய்த அயத்தூள், இவைகள் இரண்டும் சம எடையாய் எடுத்து கல்வத்திலிட்டு முலைப்பாலால் நன்ருய் அரைத்துப் பில்லை செய்து காயவைத்து; ஒரு அகலில் வைத்து மேலும் ஓர் அகல்மூடி மண்சீலை செய்து அச்சீலை உலரும்படி உலர்த்தி; ஐம்பது எருவில் ஒரு புடம் செய்து ஆறவிட்டு எடுத்து, மறுபடியும் பொன்னுங்கண்ணிச்சாறும் நாறு கரந்தைச் சாறும் ஒரு அளவாகக் கலந்து கொண்டு, அதனுல் நான்கு சாமம் வரைக்கும் நன்ருய்அரைத்து முன் போலவே; ஐம்பது எருவில் புடம் செய்து ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் செந்தூரமாயிருக்கும். இச்செந்தூரத்தில் குன்றிமணி அளவு சுக்குத் தூளோடு கலந்து சாப்பிட்டால் வெட்டை மிகுதியால் நமைச்சல் எடுக்கின்ற படர்மேக நோய்களும், காமாலை, சூலை, கழல்வாதம், கால்வெடிப்பு, வெட்டை, கைகால் குடைச்சல், குன்மங்கள், அதிகவாத ரோகங்கள், இல்லாமையாகத் தீரும்;

இதற்குப் பத்தியம் :- எள், புளி, புகை. பிடித்தல் இவைகளை நீக்கவேண்டும்.

ஒரு நிறை எனற்பாலது ஓர் நிறை என நீண்டது எண் ஈண்டு எள்.

26. மால் தேவி செந்தூரம்

79. பாருலகில் இன்னுமொரு பாகம் பகருகிறேன்
சீறுமால் தேவி சிலை லிங்கம் – நேருமோர்
கெந்தஅரப் பொடியும் கேள்நாகம் சூதமிவை
முந்தி யோர்நிறையா மின்.

80. மின்னே எழுவகையும் வேண்டிக் கறிவேம்பின்
தன்னுடைய சாறிட்டுத் தானரைப் பாய் – அன்றுருநாள்
தப்பாமல் வில்லைசெய்து சாதகமாய் ஐந்து எருவில்
அப்பா புடமிட்ட(து) ஆற்று,

81. ஆறி எடுத்துப்பார் ஆர்அறிவார் செந்தூரம்
மீறிடா(து) ஓர்குன்றி வெண்ணெயிலுண் – தீரவிடா
நோயுண்டோ? மானிடர்க்கு நுண்மையுடன் சொல்லுகிறன்
மாயகுன்மம் சூலையும் போ மான்.

82. போகுமே காசமெலாம் பொய்யல்ல மேகம்போய்ச்
சாகுமே குஷ்டம் தமர்வாயு—வேகுமே
பித்த கிறுகிறுப்பு பேசுங்கை காலெரிவு
சத்திவீக்கம் எல்லாம்போம் தான்.

83. விக்கல்போம் சந்நிசுர யேவும் இழுப்பிசுவும்
பக்க,வா தங்களெலாம் பாழாகும்—மக்களுக்கு
மேகவெட்டை வெள்ளையொடு மேவும் பிரமியமும்
தோகையர்க்குச் சூதகநோய் தோறு.

84. தோறும் சகலவினை தோகையரைக் கூடுதற்கு
சீருடைய சத்துவமே செய்யுமே—பாரிலுளோர்
தேகமே பொன்னிறமாம் செப்பினேம் செந்தூரம்
பாகசெம்பிற் பத்திலொன்று பார்.

85. பத்திலொன்று ஈயப் பகர்ந்த ஏழரையாம்
புத்தியுள்ள சீடருக்குப் பொன்னாகும்—வெற்றியிது
பாவிகட்கு இதமுறையைப் பன்னாதே நீமடிவாய்
தேவியைநாள் தோறும்நீ சேவி.

செய்முறை:- சுத்திசெய்த தாளகம், மனோசிலை, இலிங்கம், கந்தகம், இரும்புத்தூள், சிறுகண்நாகம், இரசம் இவைகளைச் சமமாய் எடுத்து கல்வத்திலிட்டுக் கருவேப்பிலைச் சாற்றால் நன்றாய் அரைத்துப் பில்லை செய்து உலர்த்தி, ஓட்டிலிட்டு ஓடு மூடிச் சீலைசெய்து, இருபத்தி ஐந்து எருவில் புடம்செய்து; ஆறியபின் எடுத்துப் பார்த்தால் செந்தூரமாகும். அந்த செந்தூரத்தில் ஒரு குன்றிமணியளவு வெண்ணெயில் சேர்த்து சாப்பிட்டால், குன்மம், சூலை, காசம், மேகம், குஷ்டம், தமரகவாயு, பித்தமயக்கம், கைகால் வலி, வாந்தி, விக்கல், சந்நிசுரம், விக்கம், பக்கவாயுக்கள், மேகவெட்டை, நீரழிவு, சூதக காலங்களில் எல்லாம் உண்டாகி வருந்துகின்ற சூதக வயிற்று வலி இவைகள் மெய்யாகத் தீரும். பெண்களுடன் கலப்பதற்கு வேண்டிய வன்மையுண்டாகும், உடம்பு பொன்போல் வர்ணித்து அழகடையும்.

இதில் வேதை

செம்பு பத்து குன்றிமணியில் இந்தச் செந்தூரம் ஒரு குன்றிமணி எடை கொடுத்துருக்கினால் ஏழரை மாற்றுப் பொன்னாம். இஃது அவ்வாதிகட்கு ஒக்குமேல் செய்க. பரமேஸ்வரியைத் தினமும் தரிசிப்பாயாக.

கருவேப்பிலை எனவும் பாடமுண்டு. சிலர் கறுப்பு வேம்பு எனவும் சொல்வர். சிலர் மலைவேம்பு என்பர்.

27. மந்தியான குளிகை

86. நாதமொடு லிங்கம் நவிலுவேன் காரமுடன்
சீதச் சிலையினொடு திப்பிலியும்-பேதமில்லாத்
தேனும் சுவர்ணப்பால் தோர்ந்தரைத் துண்டைகொள்
போன உயிர்திரும்பும் போற்று.

87. திரும்புமிஞ் சிச்,சாற்றில் தீராச் சுரமும்
விரும்பு,பழச் சாற்றில் விஷமும்–பொருந்தமோ
தின்ருல்,விக் கல்,வாந்தி தேரியதேன் சந்நி பித்தம்
நன்ருகு நெய்க்குன்ம நன்று.

88. ஆன்மம் போ மே,கவகை கூர்பிரம்பின் வேர்ப்பொடியும்
குன்ருத சர்க்கரையும் கூட்டிக்கொள்-தின்ருல்
படுபிளவை மேகம்புண் பறங்கி சூலைக்(கு)
இடுமிளகின் தூள்வெல்ல மே.

89. வெல்லமொடு சுக்கு மிகுமிளகு வாய்விளங்கம்
வல்ல,நில வாகை வறுத்திடித்துச்–சொல்லக்கேள்
உண்டை பொடியும்சேர்த் துண்ணவே எப்போதும்
வண்டமரும் சூலையறு மால்.

90. மாலான முத்தம் வளரிஞ்சி பூவரசு
மேலாம் கடுக்காய் விளங்கமுடன்–சீலாரும்
வெந்நீரி லே,யரைத்து மேவுசுர சத்திலிட
மன்னு,கா மாலையது மாறும்.

செய்முறை;- சுத்திசெய்த கந்தகம், இலிங்கம், பச்சை வெங்காரம், மஞேசிலே, திப்பிலி இவைகளைச் சமமாக எடுத்து முலைப்பாலால் அறைத்துக் குன்றிமணியளவு மாத்திரை செய்து அதில் ஒரு மாத்திரை முலைப்பாலில் இழைத்துக் கொடுத்தால் போன உயிர் திரும்பி வந்துவிடும். எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு மாத்திரை கொடுத்தால் எவ்விதமான விஷமும், தேனில் ஒரு மாத்திரை கொடுத்தால் விக்கலும், வாந்தியும், சந்நியும், பித்தமும், நெய்யில் ஒரு மாத்திரை கொடுத்தால் குன்மமும், மேக வகைகளும், பிரப்பங் கிழங்குப் பொடியும், சர்க்கரையும் கூட்டி ஒரு மாத்திரை கொடுத்தால் பிளவை, மேகம், புண்ணும் மிளகின்தூளும், வெல்லமுஞ் சேர்த்து அதில் ஒரு மாத்திரை கொடுத்தால் வெண்மேகமும் சூலையும், சுக்கு, மிளகு, வாய் விளங்கம், நிலாவிரை இவைகளைச் சமமாய் எடுத்து வறுத் திடித்த சூரணத்டதுன் ஒரு மாத்திரை பொடிப்பண்ணிக் கலந்து

சாப்பிட்டால் சூலையும் கோரைக் கிழங்கு இஞ்சி பூவரசம் பட்டை, கடுக்காய்த்தோல், வாய் விளக்கம் இவைகளைச் சமமாக எடுத்து வெந்நீரில் அறைத்து வடித்துக் கொதிக்க வைத்த, சுரசத்தில் கொடுத்தால் காமாலையும் தீரும்.

28. மேகக் குடிநீர்

91. வாறுகேள் சங்கு வளரும் முடக்-கொற்றான்
கூறு கேள் வெள்ளறுகு கோரையும்-வீறுகேள்
சார்ந்து குடிநீரீ சாத்தியம்சேர் மேகபிணி
கூர்ந்தோடும் சண்டையிட்டுக் கொள்.

செய்முறை ;- சங்கம்பட்டை, முடக்கொத்தான் இலை, வெள்ளறுகு, கோரைக்கிழங்கு, இவைகளை சமமாயெடுத் திடித்துக், குடிநீர் செய்து கொடுத்தால் சாத்தியமான மேக நோய் சண்டையிட்டு ஓடிப் போய்விடும்.

29. உள் மூலக் குடி நீர்

92. நீலியுடனே உருவி நீர்க்காந்தி சங்குடன்
சோலியில்லா நற்குடிநீர் சூழ்ந்துகொள்-காலையிலே
உண்டையிட்டுக் கொள்ள உள்மூலம் ஓடுமே
கண்டிதமாய்க் காலையிலும் காண்.

செய்முறை;- நீலி வேர், நாயுருவி வேர், விஷ்ணு காந்தி, சங்கம்பட்டை இவைகளை ஒரு நிறையாய் எடுத்திடித்துச் சுத்த நீர் விட்டு எட்டொன்ருய்க் காய்ச்கிக் காலையில் சாப்பிட்டால் கெட்டியாய் உள்மூலந் தீரும்.

30. க்ஷய ரோகக் குளிகை

93. காரையோடு நெல்லி கருங்காலி நல்வேலி
பாறையது சொர்னப்பா லால்அரைத்துத்-தேறவே
ஊணும் குளிகைதனை உள்ளுக்குக் கொள்ளுநிதம்
பேணுக்ஷய ரோகமெலாம் போம்.

செய்முறை:- காரைவேர், நெல்லிவற்றல், கருங்காலிப் பட்டை, உத்தாமணிவேர், பாறையுப்பு இவைகளைச் சமமாக யெடுத்து முலைப்பாலால் அறைத்துச் செய்த ரூளிகையைத் தினந்தோறும் இரண்டு வேளையும் சாப்பிட்டால் எல்லா க்ஷய ரோகங்களும் பேர்ந்து போய்விடும்.

31. வாதத்திற்கு கற்க உருண்டை

94. காணுகின்ற காந்தி கழல்வேலி யுள்ளிகறி
பேண வரைத்துப் பொசியுருண்டை-தோணும்
கழல்வாதம் கண்டவர் தங்கள்வாய்(வு) எல்லாம்
விழலாகு மே;நீர் விரும்பு.

செய்முறை:- விஷ்ணுகாந்தி, கழற்சிவிதை, உத்தாமணி இலை, வெள்ளைப் பூண்டு, மிளகு இவைகளை அரைத்து உருண்டை செய்து தின்றுல் கழல்வாதம், கெண்டைவாதம், மற்றைய வாதங்களெல்லாமும் விழலாய் விடும்.

32. கர்ம நிவர்த்தி

95. வேதமுறும் பூவுலகில் மேவு மனுக்களுக்கு
வாதை கருமத்தால் வந்தபிணி-பேதமில்லா
நன்மருந்தால் தீர்க்கவே நாமுரைத்தோம் பண்டிதரே
நில்லும் கருமத்தை நீக்கு.

இந்நூலுள் வரும் நோய்களின் குணங்கள்.

I. மூல ரோகக் குணம்

மூல ரோகத்தைச் சில நூல்கள் ஆறு எனவும், சில நூல்கள் ஒன்பது எனவும், சில நூல்கள் இருபத்தொன்று எனவும் சொல்கின்றன.

ஆயினும் ஆறு மூலங்களும், ஒன்பது மூலங்களும், இருபத்தொன்றில் அடங்குவன ஆதலின் அவைகளே ஈண்டு எழுதப்பட்டுள்ளன.

1. நீர் மூலம்

தொப்புளில் வலியுண்டாய், கீழ்வயிறு பொருமி, மலம் வறண்டு வாயில் நீர் சுரந்து காற்று பறியும்போது அதனுடன் நுரை நீர்வந்து, சீக்கிரம் மலம் வருவதுபோல் காணப்பட்டு அடிக்கடி ஆசன வழியில் நீராய்ப் போகும்.

2. செண்டு மூலம்

மலவாயில் கருணைக்கிழங்கின் முளையைப்போல் உண்டாய் மூன்று நாட்களுக்குப்பிறகு மிக வலிகண்டு இரத்தமும் தண்ணீருமாகக் கசிந்து, மலந்தீய்ந்து, இரைச்சலுண்டாய், மலவாயைச் சுருங்கப் பண்ணும்.

3. முளை மூலம்

மலவாயில் மஞ்சளின் முளையைப்போல் ஒரு முளை உண்டாய்க் கடுத்துத் தடித்து, எரிச்சலுண்டாய், அடிவயிறு கல் போலாய், மலவாய் சுருங்கி, நமைச்சலுண்டாய், இரைச்சலுடன் இரத்தம் இறங்குவதாய், ஏப்பம் அடிக்கடி உண்டாய் மலந்தீய்ந்திருக்கும்.

4. சிற்று மூலம்

மலவாயில் சிறு முளைகள் பல வுண்டாய் உடம்பு எரிச்சல். மயக்கம், வயிறு மின்மினித்துக் குத்தல், இரைச்சல், இழுத்துப் பிடித்தல், பொருமல், இளைப்பு, உடல் வெளுப்பு, பசிகுறைவு முதலிய இவைகள் உண்டாம்,

5. வறள் மூலம்

மலபந்தம், இரத்தம், துளித்துளியாய் விழுதல், உடல் உலர்தல், எப்பொழுதும் உடம்பு சூடாகவே இருத்தல், சண்டையிடுதல், மலவாயினுள் ஒருவருக்கும் தெரியாதபடி முளைகளிருத்தல், நாளேற நாளேற உடம்பில் வன்மை குறைதல் முதலியவைகள் உண்டாகும்.

6, இரத்த மூலம்

தொப்புளில் நோவெடுத்து சிறிய கதிர்போல ஆசனவாயில் சரேலென்று இரத்தம் வீழும். உடம்பு வற்றி வெளுத்துப் போகும், கைகால் ஓய்ச்சலுண்டாகும், சோபை ரோகமுண்டாகும், மார்பு இடிப்பு, தலைநோய், மயக்க மிகுதியாய்த் தள்ளுதல், கண்ணிரண்டும் மஞ்சள் போலாதல் முதலியவையாம்.

7. சீ மூலம்

மலவாய் கடுத்து எரிதல், சீயும் தண்ணீரும் உண்டாதல், உடம்பிலுள்ள தசைவறண்டு உடம்பெல்லாம் வெளுத்து மஞ்சளாதல், வாயில் நீர் சுரத்தல், நடை குறைதல், சரீரமெலிவு, சிறுநீர் மஞ்சளாயிறங்கல் முதலியவைகளாம்.

8. ஆழி மூலம்

மலவாயில் நீண்ட ஒரே முளை வள்ளிக்கிழங்கு போல் திமிர்த்துத் தோன்றுதல், நீர், சீ, இரத்தம் இவை ஒழுகுதல்,

மலம் சிக்கல், பலம் குறைவு, அயர்ச்சி, காரங்கொள்ளாமை முதலியவைகளாம்.

9. தமரக மூலம்

மலவாயில் உலக்கைப் பூண்போலாவது, தாமரைப் பூப் போலாவது மலர்ந்திருத்தல், மலம் துண்டு துண்டாய் இறங்கல், இரத்தப்போக்கு, நமைச்சல், வயிறிரைதல், நீர் இழிதல், பசி மந்தம், மேல்மூச்சு, அசதி முதலியவைகள்.

10. வாத மூலம்

மலவாயானது கோவைப் பழத்தைப் போல் சிவந்து, வாதுமைப் பூப்போல முளைவளர்ந்து கறுப்பாயும், மெல்லியதாயும், கடுப்பு, நமைச்சல், குத்தல், திமிர்த்தல் உண்டாயுமிருக்கும். அங்கு மயிர் அதிகமாய் முளைந்திருக்கும். மலஞ்சிக்கிக் கறுத்திருக்கும். வெண்மையாய் பேதியாகும். குடலுள் வலி, மிக்க தலைவலி முதலியவைகளும் உண்டாகும்.

11. பித்த மூலம்

மல வாயில் பருத்திக் கொட்டையைப்போலவும் நெல்லைப் போலவும் முளையுண்டாதல், தலைவலி, மலஞ்சிக்கல், மலம் ஆட்டுப் புழுக்கையைப்போல உருண்டை, உருண்டையாகவும், திரிதிரியாகவும், ரத்தத்துடனும், சீதத்துடனும் வெளிப் படுதல், ஆசனக் கடுப்பு, எரிச்சல், தாகம், வியர்வை, தியக்கம், கோபம், பலங்குறைவு முதலியவைகளாம்.

12. சேத்தும மூலம்

மலவாயில் வெண்மையான முளை, எந்நேரமும் நமைச்சல், எரிச்சல், கடுப்பு, சீ, தண்ணீருடன் கடுத்துக்கொண்டு மலமிறங்கல், சிறுநீர் சூடாயிறங்கல், புத்தி மாருட்டம், விந்து குறைவு, சரீரம் வெளுத்தல், ருசி குறைவு முதலியவைகளுண்டாகும்.

13. தொந்த மூலம்

மலவாய்க் குறுகிக், கோழிக் கொண்டையை அவ்விடத்துப் பதித்து வைத்ததுபோற் காணல், நடக்கமுடியாமை, வயிறு பொருமல், வருத்தம், நடுக்கம், வியர்வை, தாகம், பேதி. உடம்பானது, அட்டைபோல் சுருங்குதல், திடுக்கிடுதல் முதலியவைகளுண்டாம்.

14. வினை மூலம்

சோறு செரியாதிருத்தல், பசியில்லாமை புளியேப்பம், அடிவயிற்றில் குற்றல், கோபம், மலக்கட்டு, கைகால் ஓய்ச்சல், வயிறிரைச்சல், நரம்பெல்லாம் இழுத்தல், கடுத்தல் முதலியவைகளுண்டாகும்.

15. மேக மூலம்

ஆண்குறியில் வெள்ளை வீழ்தல், மலவாயில் இரத்தம் போதல், இரைச்சலோடு பேதி, சிறுநீர் எரிச்சல், கால்வீக்கம், தலைவலி, உடம்புபளுவு, திமிர், மூத்திரத்தில் சர்க்கரை இவைகளுண்டாம்.

16. பவுத்திர மூலம்

மலவாயிற் கட்டியுண்டாகி சிறுநீர் அடிக்கடி கசிதல், கை கால் வீக்கம், மலவாயில் கோழிக்கொண்டை போலிருத்தல், பூக்கள்போல் முளைகள் உண்டாதல், கொவ்வைப்பழம்போல் சிவத்தல் முதலியவைகளுண்டாம்.

17. கிரந்தி மூலம்

ஆண்குறியில் புண், கால் கை கடுப்பு, மலவாயினுள் விரணமுண்டாகி கொடிக் கொடியாய் முளைகள் உண்டாகி, சீ, இரத்தம், தண்ணீர் இவைகள் மிக இறங்கல், எரிச்சல், கடுப்பு, மலம் கெட்டியாய் வறண்டு, மலவாய் வெடிக்கும்படி மலமிறங்கல் முதலியவைகளுண்டாம்.

18. குத மூலம்

மலவாயில் முங்கில் குருத்துபோல ஒரு முளை வெளிப்பட்டுத்தள்ளினுல் சிலருக்குக் கஷ்டத்துடனும், சிலருக்குக் கஷ்டமில்லாமலும் உள்ளே போய்விடுவதாயுமிருத்தல், சீ, இரத்தம் போதல், வயிறு மிகுதியும் பொருமிக் கொள்ளுதல், கால் கைகள் வீக்கம், அடிக்கடி நாவரட்சியுடன் நீர்வேட்கை, தொடைவலி, கோபம் முதலியவைகளுண்டாம்.

19. புற மூலம்

மலவாயில் எண்ணெய் போலவும், தண்ணீர் போலவும் கடுப்புடன், சீ இறங்குதல், நமை, திமிர், சிறு சிறு சிரங்காய், மேலெல்லாம் உண்டாதல், கீழ்வாயில் பருப்புபோல் முளை, படுக்கமுடியாமை, பிணத்தின் முகம்போல முகம்வாடியிருத்தல் முதலியவைகளுண்டாம்.

20. சுருக்கு மூலம்

மலவாயைச் சுருக்கிக்கொண்டு பெருங்குடலில் வலிப்புடன், உப்பிசமுண்டாதல், அவ்வாயில் தடிப்பு, இரத்தமும், தண்ணீரும் சூடாயிழிதல், இரத்தம் உடம்பினின்று குறைந்து விடுவதால், வேற்றுடம்பாய் வெளுத்தல் சரீரம் அசைய முடியாமைகளுண்டாம்.

21. ஜவ்வு மூலம்

முதுகந் தண்டிலுண்டாய்த் தொப்புளில் தாமரைப் பூவைப் போல் மலர்ந்து, மலவாயில் எரிச்சலை உண்டாக்கி, அடி வயிற்றில் முல மிகுதியாய் மலவாயில் ஜவ்வுபோற் சுற்றி எந் நேரமும் சீயும் தண்ணீரும் கசியும்.

II. மேகரோகம் – 20

1. ஆச்சிய கந்தி மேகம்

சிறுநீர் நெய்போல் சீலையில் கொளுத்தினுல் எரிவதும் நாள் ஒன்றில் நான்கு படி அளவு இறங்குவதுமாகும். இதனுல் உடல் இளைக்கும். இதுகண்ட ஏழாவது நாட்குள் இறப்பர்.

2. சுத்த மேக ரோகம்

சிறுநீர் பசுநீரின் நிறமும், மணமும் உள்ளதும் ஒரு வேளைக்கு நான்கு படி அளவு இறங்குவதும், கொளுத்தினுல் வெளிச்சமாய் எரிவதுமாய் இருக்கும். இதனுல் மிகக் களைப்பும் உடலில் திடீரென்று மாறு நிறமும் உண்டாகும். இவர் பதினைந்து நாளிற் சாவார்.

3. பிரமிய மேக ரோகம்

சிறுநீரானது கொழுப்பையொத்துக் கனத்து, மாமிச நாற்றத்துடன் வேளைக்கு நான்கு படியளவாக அடிக்கடி இறங்கும். இதைக் காய்ச்சினுல் தேன் மணம் வீசும். இவர் ஆறு மாதத்திற் சாவார்.

4. மாமிச சிராவி மேகம்

சிறுநீரானது, குட்டி ஆட்டுக்கொழுப்பையொத்தும், காய்ச்சினுல் அவ்வாட்டின் நெய்நிறமும், கருப்பஞ்சாறு காய்ச்சினுல் உண்டாகும், மணம்போன்ற மணமும் உண்டாகி வேளைக்கு நான்கு படி அளவு இறங்கும். மூன்று நாள், எட்டு நாள் அல்லது ஐந்தாம் மாதத்தில் சாவார்.

5. அப்பிய மேக ரோகம்

சிறுநீரானது யானையின் மதநீரைப்போல் மிகவிரைவாய் வேளைக்கு ஒரு படி அளவாக இறங்கும். காய்ச்சினுல் உவர் மண்ணைம்போல் அடியில் வண்டல் படியும். எட்டாம் மாதத்திற் சாவார்.

6. பித்தப் பிரமிய மேகம்

சிறுநீரானது கற்ருழஞ் சாற்றையொத்த நிறமும், நாற்றமும் உள்ளதாய் ஒவ்வொரு நாழிகைக்கு இரண்டு படி அளவாக இறங்கும். காய்ச்சிஞல் அதிக நாற்றமுண்டாகும்.

7. சவிரண மேக ரோகம்

சிறுநீர் சுண்ணும்பையொத்த காரமும், துற்நாற்றமும் உள்ளதாய் வேளைக்கு ஒரு படி அளவாக இறங்கும். இதைக் காய்ச்சிஞல் அடியில் சுண்ணும்பு நீறுபோல் வண்டல் படியும் எறும்பு மொய்க்கும். இரண்டாம் ஆண்டிற் சாவார்.

8. மதுமேகம்

சிறுநீரானது பசுமையாயும், மஞ்சள் நிறமாயும், பீசத்திலும், கோசத்திலும், கடுத்தலுடன் அடிக்கடி இறங்குதல், அதைப் பிடித்துப்பார்த்தால் அடியில் வெண்மை பற்றுதல். தேகம் வெளிறலுடன் கன்றுதல் முதலியவைகளாம்.

9. சாந்திர மேகம்

சிறுநீர் பளிங்கு நிறம்போலும், தாழைவிழுதின் சாறு போலவும் இறங்கும். கோசமும், பீசமும் கடுத்துக் கூசும். காய்ச்சிஞல் சீப்போல் நாறும். வேளைக்கு ஒருபடி அளவாக இறங்கும்

10. ஆர்க்க மேகம்

சிறுநீர், முயல் ரத்தம்போல் இறங்கும். வேளைக்கு இரண்டு படி அளவாக இறங்கும். கோசம், பீசம், கடுக்கும், காய்ச்சிஞல் புலால் நாற்றம் வீசும்.

11. வசா மேகம்

சிறுநீர் இறங்கும் காலத்தில், அதன்மேல் கொழுப்புப் போல ஆடைகட்டும், ஒரு வேளைக்கு ஒரு குறுணியளவு

விட்டுவிட்டிறங்கும். காய்ச்சினல் கொழுப்பு உருக்குவது போலிருக்கும்.

12. உத்தம மேகம்

சிறுநீர் நல்ல நீரைப்போலிறங்கும், காய்ச்சினலும் நல்ல நீரைப் போலவேதானிருக்கும்; ஒரு வேளைக்கு குறுணி அளவாக இறங்கும்

13. மச்சா மேகம்

சிறுநீர், எறும்புக்குள்ளிருக்கும் மச்சை என்னும் மாமிச நிறமாக இறங்கும். காய்ச்சினல் நிணவாசனையே உண்டாகும். வேளைக்கு மூன்றுபடியளவாக இறங்கும்,

14. ஆதிக்க மேகம்

சிறுநீர் சும்மா வைத்திருந்தாலும், காய்ச்சினலும் இளநீர் போலவே நிறமும், வாசனையும் உள்ளதாய் இருக்கும். ஒரு வேளைக்கு ஒருபடியளவாக இறங்கும். தாகம் உடம்பிளைப்பு சஞ்சலம் இவைகள் உண்டாகும்.

15. சுரா மேகம்

சிறுநீர் நுரைத்தும், வெளுத்தும், பனங்கள் போலவும் மிறங்கும். காய்ச்சினல் கள் மணம் வீசும். அடியில் மாப் போல் தங்கும். மயக்கம் உண்டாகும்.

16. சுக்கில மேகம்

சிறுநீரானது சுக்கிலத்தைப் போலவே வெண்மையாகவும், தாளிச்சாற்றைப் போல இறங்கி, மெழுகு போலாய்க் காய்ச்சினல் ஈரலைப்போல் தோய்வதும்தவிர, கட்டியாகவும் இருக்கும்.

17. உதக மேகம்

சிறுநீர் கழுவு நீரைப்போல மிகுசிக்கலுடன் இறங்கல், காய்ச்சினால் சுண்ணும்பு, சங்கு இவைகளைப்போல வண்டல் படிதல், தேகத்தில் ஒருவித நாற்றம் வீசுதல், முதலியவை களாம்.

18. பிரச மேகம்

சிறுநீரானது தடித்து ஈ, எறும்பு மொய்ப்பதாய், தேனுக்குள்ள நிறம். வாசனை, உருசி, கனம் இவைகளைப் பெற்றிறங்குவதாய், காய்ச்சினால் மெழுகுபோல் பாகாகுவதாய் வேளைக்குக் குறுணியளவாய் இறங்கும். உடம்பில் தேன் மணம் வீசும்,

19. சார மேகம்

சிறுநீரானது சுண்ணும்பு போலவும், உவர்நீர் போலவும் வேளைக்குக் குறுணியளவாக இறங்கும். காய்ச்சினால் அடியில் உப்பு படியும்.

20. தைத்திய மேகம்

சிறுநீரானது இறைச்சியைக்கழுவின சலம்போல இறங்கும். காய்ச்சினால் அக் கவிச்சு வாசனையே வீசும். வேளைக்கு முந் நாழி அளவாக இறங்கும். நீர்த்தாரை முறுக்கி இறங்கும்.

III. குஷ்டம் - 21

1. புண்டரீக குஷ்டம்

சரீரம், முகம், கால் இவைகளில் பலவர்ணமான விரணம், தினவு, பன்னீர்போலச் செந்நீர்வடிதல், தாமரைப் பூவின் இதழைப்போல் குவிந்து கறுப்பு, சிவப்பு, படைகளுண்டாதல் இது ஐயத்தால் உற்பத்தியாம். (ஐயம் = சிலேத்துமம்).

2. விஸ்போடக குஷ்டம்

இதில் கொப்பளங்கள் நல்லப்பாம்பின் விஷப்படம்போல் தடித்து வெளுப்பாகும். அவைகளில் வெப்பும், விஷ எரிச்சல் போல் எரிச்சல், தோல் தடிப்பு, துக்கம், சஞ்சலம் இவை உண்டாகும்.

3. பாமா குஷ்டம்

தாமரை முகிழையொத்த வெண்மையான கொப்புளங்கள். அவற்றின் தினவு, சீ, எரிச்சல், சொரி, பாம்பின் தோல் போல் உரிதல். வீக்கம், கை, கால் குறைதல் இவை உண்டாம்.

4 ஏகசர்ம குஷ்டம்

உடம்பு மிகக் கறுப்பாய்ச் சிவந்ததோல் உரியும், வற வறென இழுக்கும், வெடிக்கும், நமைச்சல், கால் விரல்கள் கனப்பு, உடம்பெங்கும் வலிப்பு இவைகள் உண்டாகும்.

5. கர்ன குஷ்டம்

தோலெல்லாம் பச்சை நிறத்துடன் வெடித்துப் பொரி, பொரியாய்க் காணல், உடம்பெல்லாம் வேதனை, உடல் பளுவு, திமிர், காக்கணம்பூ நிறம், வீக்கம், மனக்கிலேசம் இவை களுண்டாம்.

6. சர்ம குஷ்டம்

தோல் பசுமை, வெண்மை, செம்மை, கருமை, என்னும் இந்நிறங்களாகித் தினவுடன் தடித்தல், அதில் சீ வடிதல், வயிற்றிலும், கடிகஸ்தானத்திலும் சொறி உண்டாதல், எரிச்சலுடன் காங்கை, திமிர், வயிற்றிற் கண்டிப்பு என்னும் இக் குணங்களுண்டாகும்.

7. கிருஷ்ண குஷ்டம்

சர்வாங்கமும், கறுக்குதல். தோலில் திமிருடன் நாற்றம் வீசல். எழுவகைத் தாதுக்களும் சூடாயிருத்தல், உடம் பெங்கும் நோயுண்டாதல், புறங்காலிலும், அறையிலும் கொஞ்சமாகவும் தலையில் அதிகமாகவும் கறுக்குதல், புத்தி சஞ்சலமுறுதல் என்னும் இக்குணங்களுண்டாம்.

8 அவுதும்பர குஷ்டம்

உடம்பில் அடுக்கடுக்காய் அத்திக்காய்போல் கொப் புளங்கள் உண்டாய், ஆங்காங்குக் காய்வதும் முளைப்பது மாயிருத்தல், உடம்பெங்கும் கறுத்தல், தோல் திரைந்து தொங்குதல், உடம்பு முழுமையும் திமிர், சொரி, இரத்தம் வடிதல், மிக்க மயக்கம் என்னும் இவைகள் உண்டாகும்.

9. மண்டல குஷ்டம்

தலையிலும், சர்வாங்கத்திலும் பச்சை நிறமாயும் சிவப்பு நிறமாயும் தோற்றல், ஒருவேளை தலையில் மாத்திரம் வெளுப்பு, உடம்பெல்லாம் தடித்துக் கறுத்தல், நமை, சொரி, அத னின்றும் இரத்தம் வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாம்.

10. அபரிச குஷ்டம்

உடம்பெல்லாம் நொந்து கறுத்து இரத்தம் வடிதல், மன வருத்தம், உடல் தொடக் கூடாமை, வாயு அதிகப்பட்டு அதனுல் அதிக நோய், அதிரல், வேதனை, தண்ணீரைத் தொட்டால் வீக்கம், வெடிப்பு இவைகளுண்டாதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

11. விசர்ச்சிகா குஷ்டம்

எண்ணெய் தடவினது போலிருத்தல். வெளிறல், நமை, எரிச்சல், வேதனை, சிவந்த தடிப்பு, சருமமெல்லாம் உரத்

தலுடன் சிவத்தல், சுறசுறப்பு, வயிற்றிசிவு, சஞ்சலம், கோபம் கால் எரிச்சல், சலிப்பு, வெட்கம் என்னும் இவைகளுண்டாகும்,

13. கிடிப குஷ்டம்

சர்வாங்கமும் பஞ்சை நிறம், கனத்தல், யானைத் தோலை போல் இருத்தல். அடிக்கடி நீரிறங்கல், நமை, சொரி, தேகத்தில் சிலைத் தண்ணீர் வடிதல், நாற்றம், வாதாதிக்கம் என்னும் இவைகள் உண்டாம்.

14. சர்மதல குஷ்டம்

தேகத்தில் கீற்றுக் கீற்றுக வெடித்தல், உடல்பெல்லாம் வலி, வேதனை, தடித்துச் சிவத்தல், அதில் ரத்தம் வடிதல், தொடக்கூடாமை நமை, மயக்கம், அசதி, வயிற்றுவலி, என்னும் இவைகளுண்டாம்.

15. தத்துரு குஷ்டம்

தேகத்தில் சிவந்த தடிப்பு, வெளிறல், நமை, மயிர் அதிக மாக முளைத்தல், அவைகளெல்லாம் சுருளுதல், பித்த சிலேஷ் மாதிக்கம், ஊதல், திமிர் என்னும் இவைகளுண்டாம்.

16. சித்மா குஷ்டம்

வாத பித்தத்தால் சுரைப்பூ நிறமாகச் சரீர முழுவதும் திமி ருடன் தடித்தல், மஞ்சள் நிறமாக வட்டம்வட்டமாகப் படை தோன்றல், இரத்தம் ஒழுகல், நினைவு மறதி என்னும் இவை களுண்டாம்.

17. சதாரு குஷ்டம்

இரத்தம், பீதம், வெண்மை, என்னும் நிறங்களுடன் தடிப் பான ரணங்கள் பிறக்கும். அவைகளில் எரிச்சலுடன் நமை, கரடுகட்டல், சருமம் பாம்புத் தோலைப்போல் திரைந்து தொங் குதல், நாசி, கண், காது, கன்னம், இவைகளில் மிகத்தடிப்பு, சிலேஷ்ம வாதாதிக்கம் என்னும் இவைகளுண்டாம்.

18. சுவேத குஷ்டம்

சர்வாங்கமும் தடித்து வெள்ளை நிறமாக வெளுத்தல், உதடு, உள்ளங்கை, குதம், குய்யம், இவைகளில் நெருப்புப் பட்டதுபோல் புண்ணுதல், மேற்படி இடங்களில் உள்ள மயிர் வெளுத்தால் அசாத்தியம்.

IV. காமாலை – 13

1. ஊது காமாலை

உடல் வீக்கம், கனத்தல், திமிர், எரிச்சல், உலரல், உள்ளங்கை, உள்ளங்கால், கண், சரீரம் இவைகளில் வெளுப்பு, கால் கை ஓய்ச்சல், நடுக்கல், இளைப்பு, மலபந்தம், முகத்தில் மஞ்சள் நிறம். காது மந்தம், தலைப்பளுவு, கண்களி லும், வாயிலும் நீர் வடிதல். உளைப்பு, அதிக சீதளத்தால் வெப்பம், தலை சுழலல், தயக்கம், மஞ்சள் மூத்திரம்; என்னும் இவைகள் உண்டாகும்.

2. வரட் காமாலை

கால், கை வற்றல், அசதி, மூத்திரம் கறுத்தாவது சுடுகை யுடன், சிவந்தாவது இறங்கல், உடலில் சூலைபோல் குத்தல், அரைப்பார்வை மந்தம், தேகங் கறுத்தல் என்னும் இவைகள் உண்டாகும்.

3. வாத காமாலை

வயிறு பொருமல், வீக்கம், மலபந்தம், சிலவேளை தேகம் வீங்குதலுடன் திரைதல், புறங்காலும், முகமும் அதைத்தல், எந்தவேலையிலும் சோம்பல், கண் பருத்தல், தூக்கம் என்னும் இவைகள் உண்டாகும்.

4. பித்த காமாலை

மயக்கம், தயக்கம், நித்திரைப்பங்கம், சரீர சுட்கம், படுக்கையாகக் கிடத்தல், அஜீரணம், வாதாதிக்கம், அதிக சுவாசம், சோறு சோறாகப் பேதி, வயிறு இரைச்சல், அசதி என்னும் இவைகளுண்டாம்.

5. சிலேத்ம காமாலை

தலையிலும், முகத்திலும், வியர்வை, சுவாசம், இருமல், தேக நடுக்கல், மார்பு கனத்தல், தாம்பூலம் தரிக்குங்காலத்தில் செருக்கல், நடை தளரல், கண் சிவத்தல் என்னும் இவைகள் உண்டாகும்.

6. வாத சிலேத்ம காமாலை

அஜீரணம், செருமல், முகம், நாசி, கண் இவைகளில் வியர்வை வயிறிரைச்சலுடன் பொருமல், நாவும் கண்ணும் வெளிறல், நடந்தால் மேல்மூச்சு, தேக வீக்கம், இருமல் என்னும் இவைகள் உண்டாம்.

7. பித்த சிலேத்ம காமாலை

வாந்தி, செருமல், தலைவலி, மனங்கெடுதி, வயிறுப்பிசம், அஜீரணம், பேதி, தாகம், நெஞ்சு புண்ணாக நோதல், மயக்கம், முகம், கால் கைகளில் வெளுப்பு, தேகம் உலரல் என்னும் இவைகள் உண்டாம்

8. தொந்த காமாலை

தேகத்தில் எரிச்சல், கடுத்தல், அசதி, குளிர், அடிக்கடி இருமல், தாகம், புளியேப்பம், நாக்குப் புளித்தல், பசி, அடி வயிற்றில் வீக்கம், வியர்வை என்னும் இவைகள் உண்டாம்.

9. மஞ்சள் காமாலை

முகம். கால், கை உண்ணாக்கு, மூத்திரமாகிய இவைகளில் மஞ்சள் நிறம், முகத்தில் மினுப்பு, உடல் முழுதும் ஊதல், தளர்ச்சி, அன்னத்திவேஷம், அழுகை, சுவாசத்தில் மஞ்சள் நாற்றம் வீசுதல், தாதுநஷ்டம் மலபந்தம் என்னும் இவைகள் உண்டாம்.

10. அழகு காமாலை

சரீரம் வாட்டமில்லாமல் வெப்பத்துடன் மினு மினுத்தல், கை கால் அசதி, புருவம். கண், மூத்திரம் இவைகளில் மஞ்சள் நிறம், ஆண் குறியில் எரிச்சல், அஜீரணம், உப்பிசம், என்னும் இவைகள் உண்டாகும்,

11. செங்கமலக் காமாலை

தாமச குணம், உடல் தளர்தல், சோம்பல், மூத்திரம் சிவந்தாவது, மஞ்சளாக வாவது அருகியருகி இறங்கல், உடலும், நகமும், வெளிறலுடன் சுட்கித்தல், சுரம், உள் நாக்கு, நா, உமிழ்நீர் இவைகளில் மஞ்சள் நிறம் என்னும் இவைகள் உண்டாம்.

1?. கும்ப காமாலை

தேகம் கண்டு கண்டாக வீங்குதல், அடிக்கடி களை, தேகமும், சிறுநீரும் மஞ்சளாயிருததல், மாலைக் காலத்தில் வியர்வைக் காணல், வாதம் அதிகரித்தல், கண் சிவத்தல், உடல் சோர்தல், மயிலுறக்கம்போலுறக்கம், இளகிய மலம் என்னும் இவைகள் உண்டாம்,

13. குன்ம காமாலை

சோறு சமிக்கின்ற காலத்தில் அடிவயிறு வலித்தல், வாந்தி, கண்களில் மஞ்சள் நிறம், மஞ்சள் நிறத்துடன் குழம்பிய மூத்திரம், வாய் வெளிறல், மனத்திற்கு ஒன்றுந் தோன்றாமை, இருமல், இரைப்பு, மயிலுறக்கம் போலுறக்கம், படுக்கையாகக் கிடக்கையிலும் புரளல் என்னும் இவைகள் உண்டாகும்.

V. குன்மம்—8

1. சூலைக் குன்மம்

உண்ட பதார்த்தங்கள் செரியாமை, அன்னஞ் செல்லாமை, துருத்தியைப்போல் வயிறுப்பல். அவயங்கள் கடுக்குதல், சரீரம் உலரல், நடை குறைதல். ஓய்ச்சல், வயிற்றில் பந்து உருளல்போல் கட்டியுருளல், அவ்வயிறு வில்லைப் போல் விகுத்துக்கொள்ளல் என்னும் இவைகள் உண்டாம்.

2. வாத குன்மம்

நடைகுறைதல், மலச்சிக்கல், உடல் கடுத்தல், கனத்தல், தூக்கம். உழலை, அற்பவுண்டி, வன்மை குறைவு, கை கால் ஓய்ச்சல், நாவரட்சி, தலை நோய் என்னும் இவைகள் உண்டாம்.

3. பித்த குன்மம்

முகத்தில் மஞ்சள் நிறம், வாந்தி மனக்கெடுதி. மயக்கம், நெஞ்சில் கோழை, சரீர காங்கை, கை கால் ஓய்ச்சல், வெயிலைக் கண்டால் தலை சுழலல், சிவந்த மூத்திரம், மந்தம், முக்கலுடன் மலஞ்சாரல், சுவாசம் என்னும் இவைகள் உண்டாம்.

4 சிலேத்ம குன்மம்

வாயில் நீர் ஊறல், இளைப்பு. தேகம் வற்றுதல், வாந்தியிடும், துர்ப்பலம், அன்னத் துவேஷம், தலை சுழலல், நெஞ்சிற் புகைக் கப்பியதைப்போல் தோற்றம், பயம், நடுக்கம், சிரோபாரம் என்னும் இவைகள் உண்டாம்.

5. சந்நி குன்மம்

தியக்கம், மயக்கம், குளிர், அற்பவுண்டி, அடிவயிற்றில் இரைச்சல், வாயில் நீர் ஊறல், வயிறு உப்பி உப்பிக் கழிதல்,

உஷ்ணம், வாய் உலர்தல், நெஞ்சில் புகைச்சல், பெருமூச்சு, சரீரமெல்லாம் குளிர்ச்சி, திடுக்கிடுதல் இவைகள் உண்டாம்.

6. ஏரி குன்மம்

அடிவயிற்றில் எரிச்சல், குடல் குமட்டல், வாய் நீர் ஊறல், தலை சுழலல், நோய், வயிற்றுப் பல், இரைச்சல், புளியேப்பம். ரோமத் துவாரங்களில் வியர்வை பெருகல், பேதி, உடல் இளைத்தல், எரிச்சல், அன்னஞ் செல்லாமை, இருமல் என்னும் இவைகள் உண்டாகும்.

7. வாந்தி குன்மம்

வாந்தி, அரோசகம், ஈரலுக்குள் எரிதல், ஏக்கம், தயக்கம், மயக்கம், வயிறுப் பல், அற்பவலி, பலவீனம், மலபந்தம், மந்தாக்னி, நடைகுறைதல், சிறு நரம்புகள் உப்பல், உடலில் திமிர் என்னும் இவைகள் உண்டாம்.

8. வலி குன்மம்

வயிற்றில் முள்ளைச் செருகுதல்போல் இருத்தல், உப்பிசம், குடைச்சல், நோய், சரீரந் திரைதலுடன் உலர்ந்து கறுத்தல், தூக்கம், அற்பவுண்டி விலாச் சொருகல், முதுகுத்தண்டில் வலி, இடுப்பு நோய், சரீரமெங்கும் கடுக்குதல், அதிகசுரம், பொய்ப் பசி என்னும் இவைகள் உண்டாம்.

VI. கிரகணி - 11.

1 வாத கிரகணி

அற்ப தீபணம், வயிற்றிற் கட்டி காணல், மலம் சிதறலுடன் கறுத்து வெல்லப் பாகுபோலும், பனைவெல்லம்போலும் பேதியாதல், என்னும் இவைகள் உண்டாகும்.

2. பித்த கிரகணி

நடுவயிறு நோதல், தூக்கம், நரம்புகள் தளரல், உள்ளில் கடுத்தல், சாப்பிட்ட மருந்து பேதியோடிறங்கல், உணர்ச்சி யின்மை என்னும் இவைகள் உண்டாகும்.

3. சிலேத்ம கிரகணி

வயிற்றிரைச்சல், வாயுபறிதல், குளிர், நடுக்கல், அதிக காங்கையுடன் நாற்றமாயும், வெளுப்பாயும் மலம் இறங்கல், ஒருவேளைக் குடலைப்போலும், பாலைப்போலும் பேதியாதல், கை கால் தளர்ச்சியுடன் சோம்பல், அறிவின்மை, அசதி, பரி தாபம், உழலை, எரிதல், புறங்கால்வீக்கம், என்னும் இவைகள் உண்டாம்,

4. தொந்த கிரகணி

தாபம், காய்ச்சல். கடலொலிபோல்வயிறிரைச்சல், தலைவலி குளிர், நடுக்கல், பால்போல் அடிக்கடி கழிதல், அம்பு வேகம் போல் வாயு பறிதல், பரிதாபம், உழலை, எரிச்சல், கால் கை களும், புறங்காலும் வீக்கம் என்னும் இவைகள உண்டாம்.

5. உஷ்ண வாயு கிரகணி

வயிற்றில் கனத்தலுடன் உப்பிசம், இரைச்சல், கை கால் அசதி, தேகங் கருகி மெலிதல், பேதி என்னும் இவைகள் உண்டாகும்.

6 அந்தர வாயு கிரகணி

புசித்தவுடன் பேதியாதல், இரைச்சல், அசதி, தாகம். தளர்ச்சி, விலாவில் இசிவு, சரீரம் வெளிறல் விக்கல் என்னும் இவைகள் உண்டாம்.

7. மூலவாயு கிரகணி

மிக இரைச்சலாய் வயிற்றைப் புரட்டல், அடி வயிறு பொருமல், மலம், வறளல், மந்தம் அடித்தொடையில் குத்தல், சரீரந்தளர்தல், குதத்திலும், கண்ணிலும் முளைபோற் காணல் என்னும் இவைகள் உண்டாம்.

8 குன்ம கிரகிணி

வயிற்றிற் குத்தல், அதிக உறக்கம், வியர்வை தலை நடுக்கல், தேக எரிச்சல், உழலை, வயிறுபொருமி இரைந்து பேதியாதல், சிலவேளைகளில் ஒருபக்கத்தில் இரைச்சல் என்னும் இவைகள் உண்டாகும்.

9. கர்ப்பக் கிரகணி

பேதி, கடுப்பு, கை கால் வற்றுதலுடன் ஓய்ச்சல், கண்களில் மஞ்சள் நிறம், பலவித கழிச்சல், அதிக தாகம் சாப்பிட்டால் வாந்தியாகுதல், உழலை என்னும் இவைகள் உண்டாகும்.

10. ஒட்டு கிரகணி

படுக்கையே இதமாகத் தோற்றல், இளைப்பு, வயிற்றில் அதிக நோவு, மார்பிலும், விலாவிலும், முதுகிலும், வலித்தல், மலம் ஒரேதரமாக இறங்காமல் துட்டெடை, துட்டெடையாக இறங்கள், தொப்புள் வளையம்போற் சுருங்குதல் என்னும் இவைகள் உண்டாகும்.

11. சங்கர கிரகணி

வயிறு பொருமல், செரியாக் கழிச்சல், அபானத்தில் சுடுகையுடன் எந்நேரமும் நினைத்தல், குறுவியர்வை, உக்கிரமான சுரம், மனக்கெடுதி, நெஞ்சிற் கபாதிக்கம், இருகண்களும் சரிதல் என்னும் இவைகள் உண்டாம்.

VII. அஜீரண நோய் - 4

1. விதூமா ஜீரணம்

அஜீரணம், புளியேப்பம், உண்ட சோறெல்லாம் வாந்தியாகுதல், வயிற்றுப்பிசம், புளித்த பேதி, இரைச்சல், முகம் கறுத்தல், கேசம் வாடல், மயக்கம், முன்பின் தோன்றுமை, மிகுவேதனை, கிடைபொருந்தாமை, தண்ணீர்த்தாகம்என்னும் இவைகள் உண்டாம்.

2. தூமா ஜீரணம்

அஜீரணத்தோடு சுபாவமான ஏப்பம், உண்ட பொருள்கள் தங்காமல் அடிக்கடி வாந்தியாகுதல், புளியேப்பம், உதடும், நாவும் வறளல், உடல் முழுவதும் எரிச்சல், அல்லித்தண்டைபோற் குளிர்ச்சி, ஒருவேளை கண்டத்தில் வியர்வை, உடல் வாடல் என்னும் இவைகள் உண்டாம்.

3. விஸ் பஷ்டா ஜீரணம்

அஜீரணத்தோடு சரீரமெல்லாம் மிகுநோதல், அதிசயித்தியம், கோழை, சரீரமும் கண்ணும் வெளிறல், வெளுத்தவாந்தி பொய்ப் பசி, அடிக்கடி நுரை நுரையாகப் பேதி, இருமல், சுவாசம், துயரம், தலைப்புரட்டல், வயித்தியத்திற்கு வசப்படாமை, என்னும் இவைகள் உண்டாம்.

4. இரச சேஷா ஜீரணம்

மனக் கெடுதி, வாந்தி, மயக்கம், மூர்ச்சை, தன்வசமழிதல் நா, கண்கள், மூக்கு இவைகள் கறுத்தல், சரீரம் கறுத்துலர்தல், சோற்றில் வெறுப்பு, தண்ணீர் மிக வருந்தல், வெளுப்பும் கறுப்புமாய்ப் பேதியாதல், கண்களை உருட்டிப் பார்த்தல் உதறல் என்னும் இவைகள் உண்டாம்.

VII. அதிசார நோய்—7

1. வாதாதி சாரம்

வயிற்றிற் பொருமலுடன் நோவு, குத்தல், வாயுமிகுதல், நீர் சரியாயிறங்காமை, சோறு செரித்தும் செரிக்காமலுமாகிற பேதி, சிலவேளை அப்பேதியானது மஞ்சளாகவும், சிலவேளை கறுப்பாகவும், சிலவேளை வெளுப்பாகவும் நாற்றத்துடன் பேதி யாதல், புளியேப்பம் என்னும் இவைகள் உண்டாம்.

2. பித்தாதிசாரம்

மலம் அதிகமாக வரண்டு நுரை நுரையாய்ப் பேதியாதல், வாதாதிக்கம், தேகம் வாடிக் கைகால் வீங்கல், அதிக சூடு, உடல் வெளுத்தல், தலைவலி, வாந்தி என்னும் இவைகள் உண்டாம்.

3. சிலேத்மாதிசாரம்

நுரைநுரையாய் வயிறுநோயுடன் பேதியாதல், அப்பேதி யில் மாமிசத் துண்டுகள்போல் தோன்றல், அருசி, இருமல், சுவாசம், மயிர்கூச்சு, ஆசனக் கடுப்பு, உடல் முழுமையும் நமை என்னும் இவைகள் உண்டாகும்.

4. திரி தோஷாதி சாரம்

உள்ளில் எரிச்சல், வெளியில் குளிர்ச்சி, விக்கல், வாந்தி, இருமல், சுவாசம், வயிற்றிரைச்சல், பொருமல், வயிறு சுருட்டி நோதல், இரத்தமும் சீதமுமாகக் கழிச்சல், அதிக தூக்கம், உடல் நடுக்கல், உடம்பெல்லாம் குத்தல், அறிவின்மை என்னும் இவைகள் உண்டாம்.

5. சுராதி சாரதி

சுரம், மூர்ச்சை, பிரலாபம், அடித்தொடையும் கீல்களும் கடுத்தல், காந்தல், வாந்தி, தாகம், பேதியும் சிறுநீரும் கொதிப்பாய் இறங்கல், விடா இருமல், அப்பேதி பல நிறமாய் ஆதல் என்னும் இவைகள் உண்டாம்.

6 சன்னிபாதாதி சாரம்

விடாமல் காய்ச்சல் காய்தல், சுவாசம், இருமல், விக்கல், நாவரட்சி, அழற்சி, பேதி, பிரலாபம், உடல் திமிர்த்தல், வயிற்றுவலி, அடிக்கடி மயக்கம் உடம்பெல்லாம் குளிர்மை என்னும் இவைகள் உண்டாம்.

7. தோஷாதி சாரம்

தண்ணீர் குடித்தால் அது போய் இறங்கவேண்டிய இடம் தவறி நரம்புத் துவாரங்களில் விழுந்து அந்த நரம்புகளை அழுகப்பண்ணி, அபான வாயுவோடுகூடி, மலப்பைக்குள் புகுந்து, மூலாக்கினிக்குக் கீழேயுள்ள சோற்றைச் செரிக்கப் பண்ணுமை, வயிறிரைந்து மிக்க நாற்றத்துடன் பேதியாதல் என்னும் இவைகள் உண்டாம்.

IX. க்ஷய நோய் - 12

1. பிரம க்ஷயய்

சரீரம் இளைத்து இருமல், உள்ளெல்லாம் புண்ணுய்விடல், புத்தி கலங்கல், கபம் நீராய்வருதல், கோழை, இரத்தம் விழுதல், தீபாக்கினிக் குறைவு, கண்ணில் இரத்தம் குறைதல், அருசி, வாந்தி, எப்பொழுதும் சுரம்போல் காய்தல் என்னும் இவைகள் உண்டாம்.

2. இராஜ க்ஷயம்

வெதும்பல், தலைநோய், மார்பு நோயுண்டாய் கபம் உண்தால், அது மஞ்சள்போல் இருத்தல், தொண்டை அழற்சி கண்டெரிதல், நோதல், பூனைக் குரலாய்க் குரல் திரிதல், உடம்பெல்லாம் நொந்து நெருப்பைப் போல் காணல், இருமல் வாந்தி என்னும் இவைகள் உண்டாம்.

3. வைசிய க்ஷயம்

கை கால்கள் ஓய்தல், வெயிலைக் கண்டவிடத்து வேர்வை மிக்குண்டாய்க் காய்ச்சல் காணல், இருமல், கோழை, சரீரம் பஞ்சைப்போல் வெளுத்தல், சோறு மிகுதியாய்க் கொள்ளாமை ஆறு ஆண்டுகளுக்குப்பின் மிகுதிப்படுதல் என்னும் இவைகள் உண்டாம்.

4. சூத்திர க்ஷயம்

கண் எரிந்து தண்ணீர்ப் பாய்தல், அடிக்கடி இருமல், தொண்டை நோய், மிகவும் சுரம் காய்தல், விடியற் காலத்தில் கொஞ்சம் குளிர், மயிர்க் கூச்சு, மயக்கம், உடம்பெல்லாம் நோய், வேர்வை, ஒரு ஆண்டு அல்லது இரண்டாண்டில் மரணம் என்னும் இவைகள் உண்டாம்.

5. வாத க்ஷயம்

தலை, விலா, சந்துகள், நடுமுதுகு இவைகள் நோவுடன் கடுத்தல், வாந்தி, சுரம், தாகம், தோள், கை, கால், இவைகளில் துடிப்பு, கழுத்து நீண்டு காணல், அதிசாரம், இருமல், கோழை, உடலில் சில இடங்கள் குளிர்ந்திருத்தல் என்னும் இவைகள் உண்டாம்

6. பித்த க்ஷயம்

விலா, முதுகு இவைகள் சுருங்கி இரைதல், இருமல், கோழை, குளிர்மை, இரத்தவாந்தி, மூர்ச்சை, குரல் கம்மல்,

பசியின்மை, தேகம் வெளுத்து மஞ்சளாதல், மூத்திரம் மஞ்ச ளாதல் என்னும் இவைகள் உண்டாம்.

7. சிலேத்ம க்ஷயம்

இருமல், கோழை, வாந்தி, மூச்சு, அருசி, அதிசாரம், குரல் மாறுதல், உடல் வெளுத்தல், அசதி, சந்தாபம், ஆலோபம், மூக்கில் நீர்வடிதல், சோம்பல், சொல் தவறல், சுரம், தாபம், உடல் சொரியாதல் என்னும் இவைகள் உண்டாகும்.

8. வாத பித்த க்ஷயம்

உடல் கடுத்தல், சுரம், தாகம், கோழை, வாந்தி, அருசி, இருமல், சுவாசம், உடம்பெரிச்சல், ஆலோபம், மயக்கம், வாயில் நீர்சுரத்தல், மலங்கழிதல், நீர்க்கட்டல், நாக்கு உதடு இவைகள் கறுப்பு என்னும் இவைகள் உண்டாகும்

9. வாத சிலேத்ம க்ஷயம்

குறள் மாறல், தொண்டைக் கம்மல், சுரம், சுவாசம், வாந்தி, இருமல், உடல் கடுத்தல், கோழை, பலக்குறைவு, அக்கினி மந்தம், அரோசம், உடல் வெளுப்பு, கால் கைகள் வரட்சி என்னும் இவைகள் உண்டாகும்.

10. பித்த சிலேத்ம க்ஷயம்

தூக்கம், சோம்பல், உடம்பெல்லாம் சுரம் காய்தல், காய் தல், வாந்தி, கோழை, இருமல், பேதி, நாற்றத்துடன் இரத்த வாந்தி, மயக்கம், பிரமை, தாகம், சிறுநீர் இரத்தம் போலி ழிதல், என்னும் இவைகள் உண்டாம்.

11. விகார க்ஷயம்

காதிரைச்சல், கண்கள் வெளுத்தல், பலங்குறைவு, உடம்பு இளைத்தல், விரணம், நீர் மிகுதியாய்ப் போதல், மூச்சு, விலாப் பக்கம் நோய், இரத்த வாந்தி, பயம், வாய் நாற்றம் என்னும் இவைகள் உண்டாம்.

12. தொந்த க்ஷயம்

குரல் மாறுதல், சுரம், மிக்கிருமல், இரத்தமும், கோழையும் கலந்து விழுதல், நாற்ற பேதி, நடுக்கல், மயக்கம், நாக்கில் வட்டமாய் கறுப்புண்டாதல், உடம்பு கற்ருழை நாற்றம் வீசல், அதிக பேச்சு என்னும் இவைகள் உண்டாம்.

X. வெள்ளை

நாபிக் கமலமுழுமையும் நீர்வருகின்ற வழிகளிலும், விரணமுண்டாய்ச் சிறுநீர் போகும்போதெல்லாம் இடுப்பு நோதலுடன் வெள்ளை விழுதல்.

XI. சூதக வாயு

இதை இரத்தவாத பித்த குன்மம் எனவும் சொல்வார்கள். இந்த ரோகமானது முன்பு வாதத்தால் தங்கின மாதாந்த ருது கால ரத்தமானது வெளிப்படும்போது அதிக நோய், சரீரம் மரத்தல், எரிச்சல், பேதி, தாகம், சுரம், அக்கெட்ட ரத்தம் இருக்கும் இடத்தில் மிகக் குத்தல், அல்குலில் மேகக் கசிவு, அதில் துர் நாற்றம், எப்போதும் வேதனை என்னும் இக் குணங்கள் உண்டாகும்.

XII. நீர் ஆம்பல்

வாயுவால் கீழுடலின் உட்பாகத்தில், இடப்பக்கத்திலாவது வலப் பக்கத்திலாவது ஆமையின் உருவையொத்த கட்டியாய் நோவில்லாமலும் வயித்தியத்திற்கு இடம் கொடாமலும், அசைவதும், அசையாததுவுமாக இருக்கும். இதை நீராமை எனவும் கூறுவர்.

XIII. காய்ச்சல் கட்டி

இடது பக்கத்திலுள்ள மண்ணீரல் நோயான இதின் குணமாவது மலச்சிக்கல், மந்தம், வயிற்றிற் புரளல், வன்மை குறைதல், சாதங் கொள்ளாமை, ஒக்காளம், ஏப்பம், இவைகள் உண்டாம்.

XVI. (கைகால் எரிவு) எரிபித்தம்

இஃது அடித் தொண்டை, பாதம், கண், உள்ளங்கால், உள்ளங்கை இவ்விடங்களில் எரிச்சல், காது, மூக்கு, இவ்விடங்களில் வறவறப்பு, முதுகு, முழங்கை, முழங்கால்; இவ்விடங்களில் விருவிருப்பு, காற்றின்மேல் மிகவிருப்பம் இக்குணங்களை உண்டாக்கும்.

இந்நூலில் வரும் சரக்குகளின் சுத்திமுறை:

1. அயசுத்தி

தேவையான இரும்புத்தூளை ஒரு மண்சட்டியிலிட்டு, எண்ணெயூற்றி, அதில் நன்ருய்க் கலக்கும் படி பிசறி ஒருநாள் வைத்து, மறுநாளில் சிகைக் காய்த்தூள் சேர்த்துத் தேய்த்து நீர்விட்டுக் கழுவிவிட்டு, அந்தத் தூளில் எழுமிச்சம் பழச்சாறு நிறையவிட்டு ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் நன்ருய்த் தேய்த்துக் கழுவி வெயிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

2. அரிதார சுத்தி

கற்சுண்ணக்கல் கால்படி ஒருமட்குடத்திலிட்டு அதின்மேல் அரிதாரக்கட்டி ஒருபலத்தை வைத்து மேலும் சுண்ணக்கல் கால்படி போட்டுச் சிறுநீர் படி ஒன்றும், குப்பைமேனிச்சாறு படி காலும் கலந்து அச்சுண்ணத்தில் ஊற்றினுல் அச்சுண்ணம் வெந்து கொதிக்கிற காலத்தில் அரிதாரத்திலுள்ள அழுக்கெல்லாம் வெளிப்பட்டுவிடும். பிறகு அதைத் தண்ணீரில் கழுவி உலர்த்திக் கொள்ளவும் இப்படி இதை ஏழு முறையும் செய்யலாம்

3 இரச சுத்தி

தேவையான பாதரசத்தைக் கருங்கற் கல்வத்திலிட்டு

1. ஒட்டறைத்தூள் சேர்த்து ஒருநாளரைத்துக் கழுவவும்.
2. அதில் மஞ்சள்தூள் சேர்த்து ஒருநாளரைத்துக் கழுவவும்.
3. அதில் செங்கல் மா சேர்த்து ஒருநாளரைத்துக் கழுவவும்.
4. அதில் இரும்புத்தூள் சேர்த்து ஒருநாளரைத்துக் கழுவவும்.
5. அதில் குப்பைமேனிச் சாறுவிட்டு ஒருநாளரைத்துக் கழுவவும்.
6. அதில் தேன்விட்டு ஒருநாளரைத்துக் கழுவவும்.
7. அதில் பிரண்டைச்சாறு சேர்த்து ஒருநாளரைத்துக் கழுவவும்.

8. அதில் இஞ்சிச்சாறுவிட்டு ஒருநாளரைத்துக் கழுவவும்.
9. அதில் ஆவாரம்பட்டைக் கஷாயம்விட்டு ஒருநாளரைத்துக் கழுவவும்.
10. அதில் சித்திரமுலச்சாருவது கஷாயமாவது விட்டு ஒரு நாளரைத்துக் சுழுவவும்,
11. அதில் கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், தான்றிக் காய்த் தோள் இவைகளை ஒரே எடையாக எடுத்துக் கஷாயம் வைத்து அக் கஷாயத்தைவிட்டு ஒருநாள ரைத்துக் கழுவவும்.
12 அதில் சிறுபிள்ளைகள் சிறுநீர்விட்டு ஒருநாளரைதுக் கழுவவும்.
13 அதில் அத்திப்பட்டைக் கஷாயம்விட்டு ஒருநாளரைத்துக் கழுவவும்.
14. அதில் குறு ஆலம்பட்டைக் கஷாயம்விட்டு ஒருநாள் ரைத்துக் கழுவவும்.
15 அதில் நாவற்பட்டைக் கஷாயம்விட்டு ஒருநாளரைத்துக் கழுவவும்.

இப்படிப் பதினைந்து தினுசுகளிலும் அரைத்தரைத்து அவ் வப்போது கழுவி உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இப்படி செய்யாவிட்டால் இதற்குள்ள எண்வகைத் தோஷங்களும் உடலைக் கெடுத்துவிடுமென்று பெரியோர் சொல்லுவர்,

4. இலிங்க சுத்தி

இலிங்கத்தை ஒரு மண் சட்டியிலிட்டு அடுப்பேற்றி, அதற்கு எலுமிச்சம் பழச்சாறும், குப்பை மேனிச்சாறும், முலைப் பாலும் சமமாகக் கலந்துகொண்டு, சுறுக்கிட்டு இலிங்கத்தைக் கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும்.

5. கந்தக சுத்தி

கந்தகத்தை இரும்புக் கறண்டியிலிட்டுப் பசு வெண் ணெய்விட்டு உருக்கிப் பசும்பாலில் ஊற்றிக் கழுவி மறுபடி அவ்வாறே பத்துமுறை செய்து கழுவி உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

6. காந்த சுத்தி

காந்தத்தை உலையில் வைத்துக் காய்ச்சிக் கொள் சாற்றிலாவது, கொள் குடிநீரிலாவது, தோய்த்துக் கழுவி உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

7. குதிரைக் குளம்பு சுத்தி

குதிரைக் குளம்பு சீவலைக் குளிர் நீரில் கழுவி உடனே உலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும்,

8. துத்தநாக சுத்தி

ஒரு சட்டியில் இலுப்பை நெய்யையூற்றி, இரண்டு நவாச் நவாச்சாரக் கட்டியெடுத்து அந்த இலுப்பை நெய்யுள்ள சட்டியின் இரண்டு பக்கங்களில் பக்கத்துக்கு ஒன்ருக அந்நெய்யில் பாதிசட்டி முழுகும்படி வைத்து. துத்தநாகத்தை இருப்புச் சட்டியிலிட்டு உலையில் வைத்துருக்கி, உருக்கி 21 முறை அந் நெய்யில் ஊற்றவேண்டும். ஒவ்வொரு முறைக்கும் கழுவி உருக்க வேண்டும்.

9. நாபி சுத்தி

நாபியைத் துண்டு முண்டாக அறுத்து எருமை நீரில் போட்டு வேகவைத்து எடுத்துக் கழுவி வெயிலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

10. நிர்விஷ சுத்தி

நிர்விஷத்தைத் துண்டு துண்டாய் நறுக்கி எருமை சாணிப் பாலும், எருமை நீரும் கலந்து அதில் போட்டு வேகவைத்து எடுத்துக் கழுவி உலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

11. நீரடிமுத்து சுத்தி

நீரடிமுத்தை மேற்ருேலோடு பசுநீரில் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறு கலந்துஅதில் துணியில் முடிந்துபோட்டுக் கொஞ்சம்

வெந்தவுடன் எடுத்துக் கழுவி வெயிலில் நன்ருய் உலர்த்தி மேல் தோல் நீக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

12. பவழ சுத்தி

நற்பவழமாஞலும், கொடிப் பவழமாஞலும் ஒரு துணியில் முடிந்து பசுவின் மோரில் போட்டு மூன்று நாழிகை ஊறின எடுத்துக் கழுவி உலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

13. புன்கவித்து சுத்தி

புன்கவித்தை எலுமிச்சம் பழச்சாற்றில் நன்ருய் ஊற வைத்துக் கழுவித் தோலுரித்துக் கழுவி வெயிலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

14. மண்டூர சுத்தி

மண்டூரத்தை உலேயில் வைத்துச் செவக்கக் காய்ச்சி எருமை நீரில் தோய்க்கவும். இப்படிப் பத்துமுறை தோய்த்தால் மண்டூரம் சுத்தியாம். பின்னர் உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

15. மஞேசிலே சுத்தி

மஞேசிலேயைத் துணியில் முடிந்து நாட்டுக் காடியில் போட்டு மூன்று நாழிகை வரைக்கும் வேகவைத்து எடுத்துக் கழுவி வெயிலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

16. நேர்வாள சுத்தி

நேர்வாளத்தை மேலோடு போக்காமல் ஒரு துணியில் தளர முடிந்து எருமைச்சாணியை, எருமை நீர் கரிசலாங் கண்ணிச்சாறு, இவைகள் விட்டுக் கரைத்து ஒருகுண்டு

சட்டியிலூற்றி அதில் மேற்படி வாளமுடிச்சைப் போட்டுப் பன்னிரண்டு மணிநேரம் வேகவைத்துப் பிறகெடுத்துக் கழுவி ஈரத்துடன் மேலோட்டைப் போக்கிப் பருப்பை இருபிளவாக்கி இடையிலுள்ள இலையை ஒன்று தவிராமல் எடுத்து நன்ருய்க் கழுவி வெயிலில் நன்ருயுலர்த்தி விளக்கெண்ணெயில் வறுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

17. வெங்கார சுத்தி

வெங்காரக் கட்டியைப் பசுவின் சாணத்தில் கால் மணி நேரம் வரைக்கும் செருகி வைத்தெடுத்துக் கழுவி வெயிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும்.

18. வெள்வங்க சுத்தி

நொச்சியிலைச் சாற்றை ஒரு மண்சட்டியில் ஊற்றி அதில் பசுமஞ்சள்தூள் கலந்து கலக்கி அதில் மேற்படி வங்கத்தை உருக்கி உருக்கி மூன்றுமுறை ஊற்றி எடுத்துக் கழுவி உலர்த்தி வைதது‌க் கொள்ளவேண்டும்.

வீரமாமுனிவர் பேரில் தசாங்கம்

பெயர்

1 ஏரார் இளங்கிளியே! தேம்பா வணிதந்த
சீரார் திருப்பெயரைத் தேர்ந்துரைப்பாய்! —பாராட்டும்
செம்பொருளின் போதகத்தார் செந்தமிழார்
எம்வீர மாமுனிவர் என்று! [சொல்வதைப்போல்

நாடு

2 வாசமிகு சோலை மரகதமே! வானவரின்
நேசமிகு நாதனவர் நாடுரையாய் — பாசமுடன்
சந்தமிகு காவியங்கள் சாத்தியவர் நாடென்றும்
செந்தமிழ் நாடே தெளி!

ஊர்

3 தாதாடும் பூஞ்சோலைத் தத்தையே! ஈத்தலத்தின்
தாதா தமிழானூர் தம்பதியென்? — போதலர்ந்தே
மட்டிழிபும் தண்கா மடிசேர் மலையடிப்
பட்டியெனும் நேர்ந்த பதி!

ஆறு

4 செய்யவாய் பைஞ்சிறகு தீஞ்சொல்லாய் அஞ்சுகமே!
மெய்வீர மாமுனிவர் மேவாறென்? — பொய்யாது
வான்தந்த மீட்பை வழங்குதற்கு ஓடிவந்த
ஆனந்த பக்தியெனும் ஆறு!

மலை

5 கொஞ்சுமொழி அஞ்சுகமே! கோலமிகு காவனலூர்
விஞ்சையர்தன் நெஞ்சங்கொள் வித்தமெது? — மிஞ்சும்
உபயத்தால் சோகுவெல் உத்தானம் — உய்க்கும்
கபாலமெனும் மலையதாம் காண்!

பரி

6 அன்னைபுகழ் பாடிவரும் பைங்கிளியே! ஆரியனூர்
பொன்னனைய தாய்தந்தார் ஊர்வதெவன்? –என்றென்றும்
சிந்தைத்தேன் ஞானமருள் சீர்மொழிகள் ஆழ்புலமை
நிந்தையிலா பாய்புரவி நேர்!

படை

7 தேன்மொழி அஞ்சுகமே! செந்தமிழ்த் தேசிகரின்
ஒன்னலரை வெற்றிகொளும் ஒண்படையென் — புன்கண்செய்
ஐம்பொறிகள் தானடக்கி ஆட்கொள் தவமேதான்
கூம்பா படையாகும் கூறு.

பறை

8 கிஞ்சுகவாய் அஞ்சுகமே! கீர்த்திமிகு தேசிகரின்
முஞ்சுமிடி நேர்முரசு என்பகர்வாய் — அஞ்சும்
அலகைசெய் ஆர்ப்பொலியை மாய்விக்கும் நற்செய்தி
பலமிக்க வேதப் பறை.

தார்

9 நேய இளங்கிளியே! நீங்காத அன்புவளர்
மேய தவத்துறைவன் மெய்தாரென்? —ஆயதமிழ்ச்
சேவைப்பூ சார்ந்த திருமறையின் சேவைப்பூ
கோவைமணி தாராம் கூட்டு.

கொடி

10 கோலப் பசுங்கிளியே! கோதிலா வித்தகரின்
ஆலக் கொடியென் பகர்ந்திடுவாய்—சாலவே
ஏதிலார் அஞ்ச விளங்கிமேல் வென்றுடும்
கோதில் சிலுவைக் கொடி.

புலவர்மணி ஜோசப்ராயர்,
புதுவை.

வீரமா முனிவர் மருத்துவ நூல் பாடல்

ஊத்தைக்குழி தனி(ல்) நாதவிந்'து) ஊறியுட(ல்)
எடுத்தால்

நாற்றமென சா(ண்) உட(ல்)அவ் வழிக்கேமன(ம்)
நாடிடுங்காண்

சோற்றுத் துருத்திஎரி கும்பிமாய் கை துலைத்து விடார்

காற்றும் வசப்படா ஞானசுகாதிதம் காண்கிலரே!

பஞ்ச இந்திரியம் பாயுமாறு ஊறதின் பாச்சலிலே

தஞ்சவர(ம்) இருந்தாடுதுகாண் விடநாக சர்ப்பம்

மிஞ்சு(ம்)வம் மூலச்சுழி நாதவிந்து வெளிவருகா

கஞ்சமலர்த் திருக்கருணை மெய்ஞ்ஞான கற்பகமே!

(வீரமா முனிவர் மருத்துவ ஓலைச்சுவடியிலிருந்து
பார்த்து எழுதப்பட்டது.)

Dr. B. மாசிலாமணி, I. M. P.
புதுவை.

அச்சிட்டோர் :

கற்பகம் பிரிண்டர்ஸ், தொலைபேசி : 975
32, அம்பலத்தாடும் ஐயர் மடத்து வீதி, புதுச்சேரி.